

# கோயம்புத்தூர் மாநகராட்சி





## 2018 - 2019

# வரவு செலவுத் திட்டம்

www.ccmc.gov.in


அம்மா




ofo

# கோயம்புத்தூர் மாநகராட்சி

## வரவு செலவுத் திட்டம்

## 2018 - 2019



# திருக்குறள்

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

– குறள் – 479

## விளக்கம்

இருப்பது, இயற்றக்கூடியது, இனியும் ஈட்டக்கூடியது ஆகியவற்றின் அளவு அறிந்து செயல்திட்டங்களை வகுத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு வகுத்துக்கொள்ளாவிட்டால் வலிமையோ அல்லது வளமோ இருப்பது போல் தோன்றினாலும்கூட இல்லாமல் மறைந்து போய்விடும்.

திருவள்ளுவர்.



மாண்புமிகு புரட்சித் தலைவி

இதய தெய்வம் அம்மா அவர்கள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி **கே. பழனிசாமி** அவர்கள்



திரு. **எஸ்.பி. வேலுமணி**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி,
சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர்



டாக்டர். க. விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப.,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்

## முகவுரை

கோயம்புத்தூர் மாநகராட்சியின் 2018–19 ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை முன்மொழிந்து தாக்கல் செய்யும் அரிய வாய்ப்பு கிடைத்தமைக்காக பேருவகை கொள்கிறேன்.

கோயம்புத்தூர் மாநகராட்சியின் வளர்ச்சிக்காக போதிய நிதியுதவி வழங்கி பல்வேறு திட்டங்களை செவ்வனே செயல்படுத்த தொடர்ந்து வழிநடத்துகின்ற மத்திய மாநில அரசுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டின் பெரும்பாலான திட்டங்கள் செயல் வடிவம் பெற்று பொதுமக்களின் நலன் காத்துள்ள நிலையில், 2018–19ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலுள்ள சிறப்பான திட்டங்களின் செயல்பாட்டு பணிகளால், கோயம்புத்தூர் மாநகரம் மேலும் வளர்ச்சிப் பாதையில் சிறப்பான நடைபோட்டு, தனிச்சிறப்பு பெற்ற மாநகராகத் திகழும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

2050ம் ஆண்டின் உச்சநிலை மக்கள் தொகையின் கணக்கின்படி கோயம்புத்தூர் மாநகரின் குடிநீர்த் தேவை 565.55 மில்லியன் லிட்டர் என கணக்கிடப்பட்டு பில்லூர் III குடிநீர்த் திட்டம் ரூ.1018.00 கோடி மதிப்பீட்டில் தீட்டப்பட்டுள்ளது. அடுத்த அரை நூற்றாண்டிற்கு கோவை மாநகர மக்களின் குடிநீர் தேவைகளை தீர்க்கும் இந்த திட்டம் கோயம்புத்தூர் மாநகராட்சி மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும்.

சங்கனூர் பள்ளம் சீரமைப்பு திட்டம் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு, மாதிரி சாலை அமைத்து, கரைகளில் நடைபாதைகள் அழகுற அமைத்து மெருகூட்டிய பின்னர்

மாநகர போக்குவரத்து இன்னல்களை குறைத்து, கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மேலும் அழகு சேர்க்கும் என்றால் அது மிகையல்ல.

திட்ட செயலாக்கங்களின் அடிப்படையில் திறன்மிகு நகரம் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகரம் அகில இந்திய அளவில் 9–ம் இடத்திலும், தமிழகத்தில் முதல் இடத்தையும் பெற்றுள்ளது. அதேபோல் தூய்மை இந்தியா திட்டத்தில் இந்திய அளவில் கடந்த ஆண்டைவிட முன்னேறி 16வது இடத்தில் உள்ளது. கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு கிடைத்துள்ள மகத்தான இந்தப் பெருமைக்கு இங்குள்ள பொதுமக்கள், தன்னார்வலர்கள் மற்றும் பொது நிறுவனங்கள் உள்ளிட்ட அனைவரின் உறுதிமிக்க ஒத்துழைப்பு மற்றும் மாநகர வளர்ச்சியில் அவர்களின் ஈடுபாடு மட்டுமே முக்கிய காரணம் என்றே கருதுகிறேன்.

குளங்கள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள், மோட்டார் பயன்பாடு அல்லாத பாதை அமைத்தல் முதலிய பணிகள் முடிந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரும்போது கோயம்புத்தூர் மாநகரம் மேலும் தனிச்சிறப்புப் பெறும்.

மாநகரில் முக்கிய சாலைகளை மாதிரி சாலைகளாக மேம்படுத்துவது, அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்துவது, வரும் ஆண்டில் மாநகராட்சியின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக அமையும்.

மேலும், ஸ்மார்ட் பள்ளிகள் அமைத்தல், தானியங்கி குடிநீர்மானி அமைத்தல், பசுமைப் பகுதிகள் உருவாக்குதல், சூரிய மின் சக்தி நிலையங்கள், சர்வதேச தரத்தினாலான ஹாக்கி விளையாட்டுத் தளம் முதலிய திட்டங்கள் மிகவும் அத்தியாவசியமான அதே சமயம் நம்நகரின் அமைப்பையே மேம்படுத்தும் திட்டங்களாகும்.

அம்ருட் (AMRUT) திட்டத்தின் கீழ் இந்தியாவிலேயே மிகப்பெரிய அளவில் 24 மணி நேரமும் தங்குதடையின்றி குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் கோயம்புத்தூர் மாநகராட்சியில் துவங்கப்பட்டுள்ளன.

இதன் பணிகள் முடிவடைந்த பின் இத்திட்டத்தின் மூலம் மாநகரின் 60 வார்டுகளில் 24 மணி நேரமும் தங்கு தடையின்றி குடிநீர் வழங்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அனைத்து குடிநீர் இணைப்புகளிலும் தானியங்கி குடிநீர்மானி நிறுவப்பட்டு துல்லியமாக கணக்கீடு செய்யப்படுவதன் மூலம் பொதுமக்கள் குடிநீரை சிக்கனமாகவும், தேவைக்கு மட்டுமே பயன்படுத்தவும் வழிவகை செய்யப்படும் என உறுதியாக நம்புகிறேன். இணைக்கப்பட்டப் பகுதிகளிலுள்ள 40 வார்டுகளுக்கான அம்ருட் குடிநீர் பணிகள் துவங்கப்பட்டுள்ளன.

மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 8 பகுதிகளுக்கான திட்டப் பணிகள் ரூ.414.50 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட்டு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தில் 43 எண்ணிக்கைகள் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் 1055 கி.மீ நீளத்திற்கு குடிநீர் பிரதான குழாய்கள் பதிக்கப்பட்டு, 2020ம் ஆண்டிற்குள் பணிகள் முடிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்காக கொண்டுவரப்படும். மேலும் கவுண்டம்பாளையம், வடவள்ளி குடிநீர் திட்டப் பணிகள் 2018–19ம் நிதியாண்டிற்குள் முடிக்கப்பட்டு சீரான குடிநீர் விநியோகிக்கப்படும்.

ஆக்கிரமிப்பிலிருந்த பொது ஒதுக்கீட்டு இடங்களை கண்டறிந்து ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு பூங்கா அமைத்தல், மற்றும் கம்பிவேலி அமைத்துப் பாதுகாத்தல் உள்ளிட்ட பணிகளால் மாநகராட்சி சொத்துக்கள் மீட்கப்பட்டு வருகிறது.

இந்தியாவிலேயே முதல் முறையாக பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றாக 3, 4 மாதங்களில் முற்றிலும் மக்கிவிடும் தன்மையுடைய உயிரி பைகள் (Bio Bags) அறிமுகப்படுத்தப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பைகளை உணவகங்கள், வியாபார நிறுவனங்கள் முதலிய தொழில் நிறுவனங்கள் உபயோகப்படுத்த ஏதுவாக கலந்தோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு இப்பைகளை மட்டுமே உபயோகிக்க வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இந்தியாவின் மிகப்பெரிய சைக்கிள் பகிர்மானத் திட்டம் இம்மாநகராட்சியில் ஆர்.எஸ்.புரம் பகுதியில் துவங்கப்பட்டு பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. செயலிகளைப் பயன்படுத்தி தேவைப்படும் போது மிதிவண்டிகளை உபயோகப்படுத்தி தேவையான இடத்தில் மிதிவண்டிகளை விட்டுச் செல்லவும், செயலி வழியாக தொகை செலுத்தவும் ஏதுவாக எளிமையான பயன்பாட்டுடன் மிதிவண்டியினை உபயோகப்படுத்தி பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் சென்று வருவதை கண்கூடாக கண்டு மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன்.

திறன்மிகு நகரம் திட்டம் மற்றும் அம்ருட் திட்டத்தின் கீழ் பூங்காக்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கான பசுமைவெளிகள் அமைக்கப்பட்டு மாநகரின் பசுமைப் பகுதிகளை விரிவு படுத்த இந்த ஆண்டில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

ஆக்கப்பூர்வமான முன்னோடித் திட்டங்களை வகுத்து, முன்னெடுத்துச் சென்று முனைப்புடன் செயலாக்கி, பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்து, செயல்பாட்டில் உள்ள திட்டங்களை பயன்பாட்டிற்கு ஏற்றவாறு மேம்படுத்தி மக்களோடு இணைந்து மாநகராட்சி பணியாற்றி வருகிறது என்ற மகிழ்ச்சியுடன், கோயம்புத்தூர் மாநகராட்சி வரும் ஆண்டில் அனைத்து வளர்ச்சிப் பணிகளிலும் மென்மேலும் தலைசிறந்து விளங்கும் என்பதை நம்பிக்கையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் அனைவரது ஒத்துழைப்பு, ஊக்கம் மற்றும் வாழ்த்துக்களுடன் வரும் ஆண்டிற்கான நம் மாநகராட்சியின் வளர்ச்சிப் பயணத்தை தொடங்குகிறேன்.

அன்புடன்



டாக்டர். க. விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப.,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்

## முன்னுரை

கோயம்புத்தூர் மாநகராட்சி பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளை கண்டறிந்து தொலைநோக்குப் பார்வையுடன் மக்களுக்கு பயன்தருகின்ற வகையிலும் ஆக்கப்பூர்வமான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தரவும் சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது என்றால் அது மிகையல்ல.

இதனடிப்படையில் 2018–19ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அனைத்து தரப்பு மக்களின் அடிப்படைத் தேவைகளை சிறப்பாக நிறைவேற்றும் வகையில் அற்புதமான திட்டங்கள் இடம் பெற்றுள்ளது.

குடிநீர் விநியோகம் சீராக நடைபெறவும், சிக்கனமாக பயன்படுத்தவும், வரலாற்று சிறப்பு வாய்ந்த பில்லூர் III குடிநீர் திட்டம், 24 மணி நேரமும் தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்யும் திட்டம் மற்றும் இணைக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம், கோயம்புத்தூர் மாநகராட்சியின் இயற்கை வடிகால்களில் முக்கியத்துவம் வாய்ந்த சங்கனூர் பள்ளம் மேம்பாட்டுப் பணிகள், பூங்காக்களின் மேம்பாட்டுப் பணிகள், நகர்ப்புற சுகாதார மையம் மேம்பாட்டுப் பணிகள், தூய்மை பாரத திட்டப் பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள், தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்புத் திட்டப்பணிகள் மற்றும் எல்.இ.டி. தெரு விளக்குகள் அமைத்தல் போன்ற திட்டப் பணிகளைத் தாங்கிய சிறப்பான நிதி நிலை அறிக்கையாக விளங்குகிறது.

மேலும், திறன்மிகு நகரம் திட்டத்தின் கீழ் குளங்கள் புனரமைத்தல், ஸ்மார்ட் பள்ளிகள் அமைத்தல், மாதிரி சாலைகள் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை பணிகள், தானியங்கி குடிநீர்மானி அமைத்தல், பசுமைப் பகுதிகள், சூரிய மின்சக்தி நிலையங்கள், ஹாக்கி விளையாட்டுத் தளம் அமைத்தல், மிதிவண்டி பகிர்தல், காற்றின் தரம் மற்றும்

அரசின் திட்டங்கள் பற்றிய விளம்பரப் பலகைகள் அமைத்தல், வணிக வளாகங்களுடன் கூடிய பல அடுக்குமாடி வாகனங்கள் நிறுத்துமிடம் அமைத்தல் போன்ற ஒப்பற்ற திட்டங்களால் கோயம்புத்தூர் மாநகராட்சி மகத்தான பெருமைகளைப் பெற்று முன்னோடி மாநகராட்சியாக திகழும் என்பதில் ஐயமில்லை.

**2018–19**ம் ஆண்டிற்கான இந்த வரவு செலவு திட்ட அறிக்கையானது மாநகர வளர்ச்சிக்கான அனைத்துக் கருத்துக்களையும் ஒன்றிணைத்த நிதிநிலை அறிக்கையாக தயார் செய்யப்பட்டுள்ளது.

## 1. ஒட்டுமொத்த நிதி நிலைமை

2018–19ம் நிதியாண்டில் மொத்த வருவாய் மற்றும் மூலதன வரவுகள் ரூ.1274.91 கோடி எனவும், வருவாய் மற்றும் மூலதனச் செலவுகள் ரூ.1257.17 கோடி எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் 2018–19ம் நிதியாண்டில் நிகர உபரி ரூ.17.74 கோடி ஆகும்.

### பொது நிதி, குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதி ஆகியவற்றின் சுருக்கம்

ரூ. இலட்சத்தில்

| விபரம் | பொது நிதி | குடிநீர் வடிகால் நிதி | ஆரம்பக் கல்வி நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| வருவாய் வரவினம் | 46,809.08 | 18,938.74 | 3,020.07 | **68,767.89** |
| மூலதன வரவினம் | 42,282.03 | 16,440.86 | 0.00 | **58,722.89** |
| **மொத்தம்** | **89,091.11** | **35,379.59** | **3,020.07** | **127,490.77** |
| வருவாய் செலவினம் | 44,068.88 | 22,504.34 | 553.45 | **67,126.67** |
| மூலதன செலவினம் | 44,141.03 | 12,849.32 | 1,600.00 | **58,590.35** |
| **மொத்தம்** | **88,209.91** | **35,353.66** | **2,153.45** | **125,717.02** |
| **உபரி** | **881.20** | **25.93** | **866.62** | **1773.76** |






# சிறப்பு அம்சங்கள்

## 2. திறன்மிகு நகரம் (Smart City)




இந்தியாவில் உள்ள நகரங்களை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு, மாநில அரசுகளுடன் இணைந்து திறன்மிகு நகரம் (Smart City) திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. கோயம்புத்தூர் மாநகராட்சியின் மிகச்சிறந்த திட்ட அம்சங்களினால் 2016ம் ஆண்டு அகில இந்திய அளவில் 13–ம் இடத்திலும், தமிழ்நாடு அளவில் முதலிடத்திலும் கோயம்புத்தூர் மாநகராட்சி தேர்வு செய்யப்பட்டது.

தற்போதைய திறன்மிகு நகர திட்டப் பணிகளின் செயலாக்கத்தின் தரவரிசை நிலவரப்படி கோயம்புத்தூர் திறன்மிகு நகர திட்டப்பணிகள், அகில இந்திய அளவில் 9–ம் இடத்திலும், தமிழகத்தில் முதலிடத்திலும் உள்ளது.

◆ **எட்டு குளங்களை புனரமைத்து மேம்பாடு செய்தல் மற்றும் மோட்டார் பயன்பாடு அல்லாத பாதை அமைத்தல்**



கோயம்புத்தூர் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் பிரதான நோக்கம், இயற்கை வளங்களை அடையாளம் கண்டு அப்பகுதி சார்ந்த வளர்ச்சியை மேம்படுத்துவதோடு மாசில்லா நகரத்தை உருவாக்குவதேயாகும். அதன்பேரில் முதல் கட்டமாக மாநகராட்சி எல்லைக்குட்பட்ட எட்டு குளங்களை சுற்றியுள்ள பகுதிகளை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது பெரியகுளம், வாலாங்குளம் உள்ளிட்ட எட்டு குளங்களின் கரைகளில் தற்போதைய பயன்பாடு பற்றி அறிந்து அப்பகுதிகளையும் அவற்றைச்சுற்றி 500மீ சுற்றளவுக்குள் உள்ள இடங்களையும் சீரமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.



கோயம்புத்தூர் மாநகர எல்லைக்குள் அமைந்துள்ள எட்டு குளங்களின் இயற்கை சூழலையும் அவற்றை ஒன்றோடு ஒன்று இணைக்கும் கால்வாய்களையும் மேம்படுத்த ஒருங்கிணைந்த திட்டமும் விரிவான திட்ட அறிக்கையும் தயாரிக்கும் பணி தி/ள். ஓயாஸிஸ், புது டெல்லி என்ற கலந்தாலோசக நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் இக்குளங்களில் மழைநீர் எளிதாக அடைவதற்கு உரிய வழித்தடங்களை அடையாளம் கண்டு அவற்றை மேம்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்படவுள்ளது.

தற்போது இத்திட்டத்தை துரிதப்படுத்துவதற்காக முதல் கட்டமாக கீழ்க்கண்ட மூன்று திட்டங்களுக்கு அரசின் நிர்வாக அனுமதி கடந்த 02.03.2018 ல் பெறப்பட்டுள்ளது.

அ) பெரிய குளம் நடைபாதை – ரூ. 39.74 கோடி

ஆ) வாலாங்குளம் நடைபாதை (வடக்கு) – ரூ. 24.31 கோடி

இ) வாலாங்குளம் (மேம்பாலத்தின் அடியில்) – ரூ. 23.83 கோடி




விரைவில் இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் துவக்கப்படும். இத்திட்டத்தில் நடைபாதைகள், மோட்டார் பயன்பாடு இல்லாத வாகனப் போக்குவரத்து, பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த பூங்காக்கள், யோகா மையம், உடற்பயிற்சி கூடம், துரித உணவகங்கள், நவீன கழிப்பிட வசதி ஆகியவை அமைக்கப்பட உள்ளது. இப்பணிக்காக இந்நிதியாண்டில் ரூ.87.88 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த பணிகளைத் தொடர்ந்து கீழ்க்கண்ட இதர பணிகளுக்கும் கலந்தாலோசக நிறுவனத்தினர் விரிவான திட்ட அறிக்கைகளை மார்ச்–2018ம் மாத இறுதிக்குள் சமர்ப்பிக்க உள்ளனர்.

- ◎ அனைத்துக் குளங்களிலும் கலக்கும் கழிவு நீரினை தடுத்து சுத்திகரித்தல்
- ◎ வருடம் முழுவதும் தண்ணீர் வற்றாமல் இருக்க வழிவகை செய்தல்.
- ◎ அனைத்துக் குளங்களையும் இணைத்து இயந்திரமில்லா போக்குவரத்துப் பாதை / மிதிவண்டிப் பாதை அமைத்தல்.
- ◎ பறவைகள் சரணாலயம் அமைத்தல்
- ◎ மீன் வளர்ப்பு மையம் அமைத்தல்
- ◎ இதர குளங்களிலும் நடைபாதைகள், மோட்டார் பயன்பாடு இல்லாத வாகனப் போக்குவரத்து, பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த பூங்காக்கள், யோகா மையம், உடற்பயிற்சி கூடம், துரித உணவகங்கள், நவீன கழிப்பிட வசதி ஆகியவை அமைத்தல்

### ◆ ஸ்மார்ட் பள்ளிகள் அமைத்தல்

கோயம்புத்தூர் ஸ்மார்ட் சிட்டியின் பகுதி சார்ந்த வளர்ச்சி திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 14 வார்டுகளில் அமைந்துள்ள 22 மாநகராட்சி பள்ளிகளில் தற்போது முதல் பகுதியாக கீழ்க்கண்ட 5 பள்ளிகளை ஸ்மார்ட் பள்ளிகளாக உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | பள்ளியின் பெயர் மற்றும் அமைவிடம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 23 | சர்.சி.வி. ராமன் சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி ஆரம்பப்பள்ளி | 475.00 |
| 2 | 23 | கிழக்கு ஆரோக்கியசாமி சாலையில் அமைந்துள்ள பி.வி.பி ஆரம்பப்பள்ளி | 474.00 |
| 3 | 24 | மேற்கு சம்பந்தம் சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி | 591.00 |
| 4 | 24 | மேற்கு ஆரோக்கிய சாமி சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி இருபாலர் மேல்நிலைப்பள்ளி | 618.00 |
| 5 | 24 | சுப்பிரமணியம்சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி காதுகேளாதோர் பள்ளி | 593.00 |



மேற்படி பள்ளிகளை தனியார் பள்ளிகளுக்கு இணையாக ஸ்மார்ட் வகுப்பறைகள் மற்றும் ஸ்மார்ட் போர்டு அமைத்தல், கணினி வழி கற்பித்தல், கற்றலுக்கான பாடத்திட்டங்களை இணையவழியில் பெறுதல், கூடுதல் ஆக்கப்பூர்வமான வடிவமைப்பில் உட்கட்டமைப்பு பணிகள், நவீன கழிப்பறைகள் அமைத்தல் ஆகிய பணிகளை உள்ளடக்கி பள்ளிகளின் தரம் மேம்படுத்தப்பட உள்ளது. இப்பணிக்காக அரசின் நிர்வாக அனுமதி கடந்த 15.11.2017–லும், தொழில்நுட்ப அனுமதி கடந்த 05.02.2018–லும் பெறப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் 16.03.2018 அன்று பெறப்பட்டு பணிகளை துவக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கென இந்நிதியாண்டில் ரூ.27.51 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ◆ மாதிரி சாலைகள் அமைத்தல்

#### அ.திவான் பகதூர் சாலை



கோயம்புத்தூர் மாநகரத்தின் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பொருட்டு தற்சமயம் பகுதி சார்ந்த வளர்ச்சி திட்டத்தின் அடிப்படையில் ஆர்.எஸ்.புரம் பகுதியில் உள்ள திவான் பகதூர் சாலையில், மோட்டார் இல்லாத வாகன போக்குவரத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும் பாதசாரிகள் பயன்படுத்தும் வகையிலும் சுமார் 1.80 கி. மீ நீளம் மற்றும் 21.00 மீ அகலம் கொண்ட சாலையினை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிக்காக அரசின் நிர்வாக அனுமதி கடந்த 02.03.2018–ல் பெறப்பட்டுள்ளது. இதற்கான தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இப்பணிக்காக இந்நிதியாண்டில் ரூ. 25.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ஆ.திருவேங்கிடசாமி சாலை

ஆர்.எஸ்.புரம் பகுதியில் உள்ள திருவேங்கடசாமி சாலையில் மோட்டார் இல்லாத வாகன போக்குவரத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும் பாதசாரிகள் பயன்படுத்தும் வகையிலும் சுமார் 1.20 கி.மீ. நீளம் மற்றும் 21.00மீ அகலம் கொண்ட சாலை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிக்காக அரசின் நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இப்பணிக்காக இந்நிதியாண்டில் ரூ.25.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்தடுத்த கட்டங்களாக என்.எஸ்.ஆர்.ரோடு, சங்கனூர் சாலை முதலிய சாலைகள் உள்ளிட்ட மாநகரின் பிற பிரதான சாலைகளை ஒன்றன் பின் ஒன்றாக நிதி ஒதுக்கப்பட்டு இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

### ◆ திடக்கழிவு மேலாண்மை

**வெள்ளலூர் குப்பைக்கிடங்கு வளாகத்தில் நிறுவப்படவுள்ள கூடுதல் திடக்கழிவு மேலாண்மை ஆலைக்கு திடக்கழிவுகளிலிருந்து எரிபொருள் (REFUSE DERIVED FUEL) தயாரிக்கும் சாதனங்கள் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்தல்**

தற்சமயம் இம்மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நாளொன்றுக்கு 990 மெட்ரிக் டன் அளவிலான திடக்கழிவுகள் சேகரம் செய்யப்படுகிறது. அதில் சுமார் 500 மெட்ரிக் டன் மற்றும் 100 மெட்ரிக் டன் அளவிலான கழிவுகள் முறையே வெள்ளலூர் குப்பைக்கிடங்கு வளாகத்தில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள இயற்கை உரம் தயாரிக்கும் ஆலை மற்றும் மண்புழு உரம் தயாரிக்கும் ஆலைகளில் கையாளப்பட்டு மேலாண்மை செய்யப்பட்டு கழிவு செய்யப்படுகிறது. இதனைத்தவிர கூடுதலாகவுள்ள 390 மெட்ரிக் டன் அளவிலான திடக்கழிவுகளை முறையாக கையாண்டு மேலாண்மை செய்வதற்கென



கூடுதலாக 600 மெட்ரிக் டன் அளவிலான புதியதாக திடக்கழிவு மேலாண்மை ஆலையினை அமைப்பதற்கான கட்டமைப்புகளை நிறுவுவதற்கு ரூ. 11.50 கோடி நிதியினை ஒதுக்கி கடந்த 09.06.2017 அன்று நடைபெற்ற கோயம்புத்தூர் ஸ்மார்ட் சிட்டி லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர்கள் நிருவாக சபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு மேற்படி திட்டத்தினை 8 சிப்பங்களாக பிரித்து அவற்றினை செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டு அப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு தற்சமயம் அனைத்து சிப்பப்பணிகளும் நடைபெற்று வருகின்றன. மேற்படி புதியதாக நிறுவப்படும் திடக்கழிவு மேலாண்மை ஆலையில் திடக்கழிவுகளிலிருந்து எரிபொருள் (Refuse Derived Fuel) தயாரிக்கும் இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்து நிறுவுதல் பணியினை ரூ. 13.35 கோடி மதிப்பீட்டில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் இந்நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

### ◆ தானியங்கி குடிநீர்மானி அமைத்தல் பணி




பகுதி சார்ந்த வளர்ச்சி திட்டத்தின் கீழ் தானியங்கி குடிநீர்மானிகளை நிறுவி குடிநீர் வரத்தினை கண்காணிக்கவும், தண்ணீர் திருட்டு போன்ற முறைகேடுகளை தவிர்க்கவும் குடிநீர் விநியோகத்தினை முழுமையாக சீர்படுத்தவும் தற்சமயம் பரீட்சார்த்த முறையில் 73வது வார்டில் ரூ. 0.97 கோடி மதிப்பீட்டில் பணிகளை செயல்படுத்த பணி உத்தரவு கடந்த 30.01.2018–ல் வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பகுதி சார்ந்த வளர்ச்சி திட்டத்தின் கீழ் மீதமுள்ள 23, 24, 25, 74, 77, 78, 79, 80, 81, 82, 83, 84 மற்றும் 85 ஆகிய வார்டுகளிலும் இத்திட்டத்தினை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டு அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்காக இந்நிதியாண்டில் ரூ.40.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ◆ பசுமைப் பகுதிகள் உருவாக்குதல்

கோவை மாநகரில் பசுமை பகுதிகளை அதிகரிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட இடங்களில் பசுமை பூங்காக்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 74 | சிவராம் நகர் (தெற்கு) | 99.00 |
| 2 | 74 | ருக்மணி நகர் | 99.00 |
| 3 | 79 | ஏ.கே.எஸ் நகர் | 94.00 |
| 4 | 71 | சிவராம் நகர் (மேற்கு ) | 94.00 |

இந்த பகுதியில் உள்ள இயற்கை வளங்களை காத்தல் மற்றும் மக்களிடையே இயற்கையை பேணும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மரங்களை நட்டு பராமரித்தல், சர்வதேச தரத்தில் நடைபாதை, உடற்பயிற்சி கூடங்கள், யோகா மையம், செயற்கை நீரூற்றுகள் மற்றும் குழந்தைகளுக்கான விளையாட்டு அமைப்புகள் உள்ளடங்கியதாக பசுமைப்பகுதிகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கடந்த **14.02.2018**–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக இந்நிதியாண்டில் ரூ.**4.00** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ◆ கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம்

நகரப்பகுதியில் அமைந்துள்ள வணிக வளாகங்கள், பொழுது போக்கிற்கான இடங்கள் ஆகியவற்றில் பொது மக்களின் கூட்ட நெரிசல் அதிகமாக இருக்கும். இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி பொது மக்களிடம் நடைபெறும் குற்றச்செயல்களைச் தடுக்கவும், குழந்தைகள் காணாமல் போவதை தடுக்கவும் நகரப்பகுதிகளில் அமைந்துள்ள பிரதான சாலைகளில் போக்குவரத்தினை கண்காணிக்கவும், விபத்துகள் நிகழா வண்ணம் போக்குவரத்தினை சீர் செய்யவும், இயற்கை பேரழிவுகளை முன்கூட்டி



அறிந்து தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் ஏதுவாக மாநகராட்சி மையஅலுவலக வளாகத்தில் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென இந்நிதியாண்டில் ரூ.7.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ◆ சூரிய மின்சக்தி நிலையங்கள்

உக்கடம் கழிவு நீர் பண்ணை மற்றும் கவுண்டம்பாளையம் பழைய குப்பை மாற்று நிலையம் ஆகிய இரு இடங்களில் தலா 1 மெகாவாட் திறனுள்ள இரண்டு சூரிய சக்தி மின் நிலையங்களை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிக்காக கடந்த 10.11.2017–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் துவங்கப்பட உள்ளது. இந்நிதியாண்டில் இப்பணிக்கென ரூ.11.55 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### ◆ ஹாக்கி விளையாட்டு தளம்



மாநகரில் வாழும் மக்களிடம் விளையாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு ஆர். எஸ். புரம் பகுதியில் அமைந்துள்ள ஹாக்கி விளையாட்டு மைதானத்தை சர்வதேச மற்றும் அகில இந்திய அளவில் ஹாக்கி விளையாட்டு வீரர்கள் விளையாடும் வகையில் உலகதரத்திற்கான ஆடுகளமாக மாற்றியமைக்கவும், பயிற்சியாளர் அரங்கம், பார்வையாளர் அரங்கம் மற்றும் வாகனம் நிறுத்துமிடம் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிக்காக இந்நிதியாண்டில் ரூ. 11.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ◆ பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றாக உயிரி பைகள் உபயோகத்திற்கான விழிப்புணர்வு ஏற்படுத்துதல்



திறன்மிகு நகரமாக்கல் திட்டத்திற்கு மகுடம் சூட்டும் விதமாக மண்ணின் முதல் எதிரியான பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றாக உயிரி பைகள் அறிமுகப்படுத்தப்பட்டு சந்தைப்படுத்துதலை ஊக்குவிக்கப்படுகிறது. இப்பைகளை காகிதத்துடன் மறு சுழற்சி செய்யலாம். வழக்கமான பிளாஸ்டிக் பைகளின் வடிவத்திலேயே இதை அச்சிடலாம். விலங்குகள் உட்கொண்டாலும் அவற்றிற்கு ஆபத்து ஏற்படாது. இவை உபயோகத்திற்கு பின்னர் மண்ணில் போடும்போது மூன்று அல்லது நான்கு மாதங்களில் முற்றிலும் மக்கி விடும் தன்மை கொண்டது. நிலத்தடி நீரை மாசுபடுத்தாத தன்மை கொண்டது.

எனவே, இவ்வுயிரி பைகளை சந்தைப்படுத்த தமிழகத்தில் முதன்முதலாக கோவை மாநகராட்சி சார்பிலேயே மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் விற்பனை மையம் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பைகளை உணவகங்கள் வியாபார நிறுவனங்கள், சிறு மற்றும் பெரு வியாபாரிகள் தங்களது தேவைக்காக கொள்முதல் செய்யும் விதத்தில் தயாரிப்பாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் கொள்முதல் செய்வோருக்கான கலந்தாலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டு செயலாக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும், பிளாஸ்டிக் பைகளின் உபயோகத்தினை முற்றிலும் தடுக்கும் பொருட்டு பிளாஸ்டிக் பைகள் விற்பனையை தடை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## ◆ மிதிவண்டி பகிர்தல் திட்டம்



மாநகரத்தில் மோட்டார் வாகனப்பயன்பாடு அதிகரிப்பின் காரணமாக எரிபொருள் பயன்பாடு அதிகரிப்பதுடன் காற்று மாசடைந்து வருகிறது. இந்நிலையை தடுக்க கோவை மாநகரத்தில் மோட்டார் அல்லாத வாகனப்பயன்பாட்டினை ஊக்குவிக்கும் விதத்தில் மிதிவண்டி பகிர்தல் திட்டத்தை திறன்மிகு நகரத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சிறுவர் சிறுமியர், இளையோர் மற்றும் முதியோர் ஆகிய அனைத்துத் தரப்பினரும் மிதிவண்டியினை உபயோகிக்கும் வகையில் தற்சமயம் பரீட்சார்த்த முறையில் ஆர். எஸ். புரம் திவான் பகதூர் சாலைபகுதியில் தனியார் நிறுவனமான தி/ள். ஒஃபோ, சீன நிறுவனத்தினால் மிதிவண்டி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையங்களில் மிதிவண்டி தேவைப்படுவோர் அதற்குரிய செயலியைப்பயன்படுத்தி மிதிவண்டியை உபயோகப்படுத்தி அவர்கள் சென்று சேரும் இடத்திலேயே விட்டுச் செல்லுமாறும், செயலி மூலம் தொகையினைச் செலுத்தும் வகையிலும் இச்சேவை செயல்படுத்தப்படுகிறது. இம்மிதிவண்டிகளின் பயன்பாடானது ஜி.பி.ஆர்.எஸ். தொழில் நுட்பத்தின் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது..

சுற்றுச் சூழல் மாசுபடா வண்ணம் மோட்டார் வாகனப்பயன்பாடு அல்லாத மிதிவண்டிப் போக்குவரத்தினை ஊக்குவிக்கும் வகையிலும், பொதுமக்களின் உடல்நலத்தை பேணும் வகையிலும் இத்திட்டம் மிகவும் உபயோகமாக இருக்கும்.

மாநகரம் முழுமைக்கும் இத்திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து சுமார் ரூ.38.00 கோடி வரை முதலீடு செய்து தி/ள். ஒஃபோ, சீன நிறுவனம் இத்திட்டத்தினை அனைத்து பகுதிகளுக்கும் விரிவுபடுத்த முன்வந்துள்ளது.

### ◆ நேரு விளையாட்டு அரங்கத்தில் உயர் மட்ட ஒளி விளக்குகள் அமைத்தல்



கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் 11.12.2017ம் தேதிய பரிந்துரையின்படி சென்னை மாநகர் கால்பந்து மன்றம் Chennai City Football Club (CCFC) நிறுவனத்துடன் கோயம்புத்தூர் திறன்மிகு நகரம் (Coimbatore Smart City Ltd) புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, கோயம்புத்தூர் நேரு விளையாட்டு அரங்கத்தில் 2 உயர் மட்ட ஒளி விளக்குகள் ரூ.2.25 கோடி செலவில் ஸ்மார்ட் சிட்டி நிதி மூலம் அமைக்கப்பட்டுள்ளது.

CCFC நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் உயர்மட்ட ஒளி விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

- நேரு விளையாட்டு அரங்கில் நடைபெறும் லீக் கால்பந்து விளையாட்டுக்கு வசூலிக்கப்படும் பார்வையாளர் கட்டணத்தில் 20% கோயம்புத்தூர் ஸ்மார்ட் சிட்டி லிட். நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டும்.
- உத்தேசிக்கப்பட்ட கால்பந்து பயிற்சி மைய மாணவர் கட்டணத்தில் 20% கோயம்புத்தூர் ஸ்மார்ட் சிட்டி லிட். நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டும்.
- மாநகராட்சிப் பள்ளி மாணவர்கள் 40 பேருக்கு இலவச கால்பந்து பயிற்சி வழங்க வேண்டும்.
- கால்பந்து விளையாட்டிற்காக பெறக்கூடிய விளம்பர உரிமை வருமானத்தில் 20% கோயம்புத்தூர் ஸ்மார்ட் சிட்டி லிட். நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டும். இவற்றின் மூலமாக Chennai City Football Club (CCFC) நிறுவனம் கோயம்புத்தூர் ஸ்மார்ட் சிட்டி செய்துள்ள முதலீட்டுத் தொகையான ரூ.2.25 கோடியினை ஐந்து ஆண்டு காலத்திற்குள் திரும்ப செலுத்தும். ஐந்து

ஆண்டுகளுக்குள் மொத்த முதலீடும் திரும்ப செலுத்தப்படாமல் நிலுவையில் இருந்தால் Chennai City Football Club (CCFC) நிறுவனம் தன் சொந்த பொறுப்பில் நேர் செய்ய வேண்டும்.

### ◆ ஆரம்பகட்ட கழிவு சேகரிப்புப் பணிக்கு தேவையான பேட்டரி வண்டிகள் (Battery Operated e-Cars)



ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் பகுதி சார்ந்த வளர்ச்சியின் (Area Based Development) அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ள வார்டுகளில் அமைந்துள்ள குடியிருப்புகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளில் ஆரம்பகட்ட கழிவு சேகரிப்புப் பணியின் கீழ் திடக்கழிவுகளை வீடுவீடாக சென்று சேகரம் செய்ய தற்போதுள்ள தள்ளுவண்டிகளை ஈடுபடுத்தும் நடைமுறையினை மாற்றும் விதமாக அதே பணியாளர்களைக் கொண்டு இயக்கும் வகையில் 70 எண்ணிக்கையிலான பேட்டரி வண்டிகள் (Battery Operated e-Cars) ரூ. 1.40 கோடி திட்ட மதிப்பீட்டில் ஸ்மார்ட் சிட்டி திட்ட நிதியின் கீழ் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

### ◆ சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் விற்பனை செய்தல்

கோவை மாநகராட்சிக்குச் சொந்தமான உக்கடம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் நாளொன்றுக்கு சுமார் 40 எம்.எல்.டி கழிவு நீர் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட பின்னர் இந்நீரானது இயற்கை நீர் வழிப்பாதையில் வெளியேற்றப்படுகிறது.



இந்த சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரினை குடிநீர் உபயோகமல்லாத தொழிற்சாலை மற்றும் இதர

பயன்பாட்டிற்கு விற்பனை செய்வதற்காக கடந்த 29.11.2017—ல் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

அரசாணை எண். 68, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 13.06.2014—ன் படி 1000 லிட்டருக்கு ரூ.16.70 என்று விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் கோல்ஃப் கிளப் என்ற தனியார் நிறுவனம் மட்டுமே 1000 லிட்டருக்கு ரூ. 11.00 என்ற விலையில் கொள்முதல் செய்து கொள்ள ஒப்பந்தவிலைப்புள்ளி அளித்திருந்தது.

விலைப்புள்ளியில் கோரப்பட்ட விலையானது அரசாணையில் நிர்ணயிக்கப்பட்ட விலையான ரூ. 16.70—ஐ விட குறைவாக இருப்பதால் அரசின் கருத்தினை பெறவேண்டி கடந்த 12.02.2018—ல் கருத்துரு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

◆ **காற்றின் தரம் மற்றும் அரசின் திட்டங்கள் பற்றிய விளம்பர பலகைகள் அமைத்தல்**




திறன்மிகு நகரத் திட்டத்தின் கீழ், காற்றின் தரம் குறித்து கண்காணிப்பு கருவி மூலம் பெறப்படும் தகவல்களை பொதுமக்களிடம் பகிரும் பொருட்டு, கணினி அறிவிப்பு பலகைகள் நகரின் 30 இடங்களில் தனியார் பங்களிப்புடன் அமைக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கடந்த 25.01.2018—ல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு பலகைகளில் தனியார் விளம்பரங்களை வெளியிடும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். மேலும் இந்த மின்னணு விளம்பர பலகையில் காற்றின் தரம் மட்டுமல்லாமல் மாநகராட்சியின் சுகாதார விழிப்புணர்வு அறிவிப்புகள் மற்றும் அரசின் பொதுமக்களுக்கான அறிவிப்புகளை உடனுக்குடன் வெளியிடப்படும். விளம்பர பலகையினை தன் சொந்த செலவில் அமைத்து பராமரித்து விளம்பர பலகை ஒன்றுக்கு வருடத்திற்கு ரூ. 60,000.00 வீதம் 30 விளம்பரப் பலகைகளுக்கு வருடத்திற்கு ரூ.18.00

இலட்சம் மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும். வருடத்திற்க்கு 5% இத்தொகை உயர்வு செய்து அடுத்து 15 ஆண்டுகளுக்கு தொகை செலுத்தப்பட வேண்டும்.



### ◆ வணிக வளாகங்களுடன் கூடிய பல அடுக்குமாடி வாகனங்கள் நிறுத்துமிடம்

இம்மாநகராட்சிக்குட்பட்ட காந்திபுரம் கிராஸ்கட் சாலை, ஆர். எஸ். புரம் திவான் பகதூர் சாலை மற்றும் டவுன்ஹால் பகுதிகளில் இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடங்கள் போதுமானதாக இல்லாததால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, மேற்குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான காலி இடங்களில் வணிக வளாகங்களுடன் கூடிய தானியங்கி பலஅடுக்குமாடி இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடங்கள் அமைக்கும் பணியினை தனியார் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் மேற்கொள்ள கடந்த 09.11.2017–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளனர். தமிழ்நாடு நகர்புர உட்கட்டமைப்பு மற்றும் நிதிச்சேவை கழகத்தால் (TNUIFSL) நியமிக்கப்பட்ட கலந்தாலோசக நிறுவனம் தி/ள். ஆக்ஸினோ கேபிடல் சர்வீஸஸ், நாக்பூர் நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட இரு நிறுவனங்களுமே தொழில்நுட்ப தகுதி பெறவில்லை என தெரிவித்துள்ளது.

தற்போது பகுதி சார்ந்த வளர்ச்சித் திட்டப்பகுதியான ஆர்.எஸ்.புரம் பகுதியில் திறன்மிகு நகரமாக்கல் திட்ட நிதியினை பயன்படுத்தி ரூ. 77.00 கோடி மதிப்பீட்டில் வணிக வளாகங்களுடன் கூடிய அடுக்குமாடி வாகனம் நிறுத்துமிடங்கள் அமைக்க

## 3. அம்ருட் திட்டம்

### ◆ 24 மணி நேரமும் தங்குதடையின்றி குடிநீர் வழங்கும் திட்டம்



கோவை மாநகரின் அபரிமிதமான வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு ரூ.159.85 கோடி செலவில் எல்லை விரிவாக்கத்திற்கு முன்பிருந்த 72 வார்டுகள் உள்ளடக்கிய மாநகராட்சிக்கென பில்லூர் இரண்டாவது தனி குடிநீர் திட்டம் 2012 –ம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டம் மூலம் நாளொன்றுக்கு சுமார் 125 எம்.எல்.டி குடிநீர் மற்றும் சிறுவாணி குடிநீர் திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு 75 எம்.எல்.டி மொத்தம் 200 எம்.எல்.டி கிடைக்க இருப்பதை கருத்தில் கொண்டு எல்லை விரிவாக்கத்திற்கு முன்பிருந்த மாநகராட்சி பகுதிகளில் 24 மணி நேரமும் தங்குதடையின்றி நீரழுத்தத்துடன் குடிநீர் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்த அரசாணை எண் (எம்.எஸ்) 130, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை. நாள் 27.08.2015–ன் படி பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்பு மூலம் ரூ.556.57 கோடி மதிப்பீட்டில் திட்டத்தை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் துணை பிரதான குழாய்கள் 105 கி.மீ. நீளத்திற்கும் 3 எண்ணிக்கையிலான தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் நீர்உந்து நிலையங்கள், 29 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், 63 பகுதிகளில் 1470 கி.மீ. நீளத்திற்கு குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1,50,000 வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சிறப்பு கருவிகளான

தானியங்கி குடிநீர் அளவுமானிகள் ஐந்தும், எந்த நேரமும் பணம் செலுத்தும் இயந்திரம் 5 எண்ணிக்கைகளும் மொத்த குடிநீர் அளவுமானி மற்றும் டேட்டா கருவி 101 எண்ணிக்கைகளும் கிருமி நாசினி குளோரின் வாயுக் கருவிகள் இரண்டு இடத்தில் நிறுவவும், 90 கி.மீ. நீளத்திற்கு ரைடர் குடிநீர் பிரதான குழாய்களும் பதிக்கப்படவுள்ளது. பொதுக் கருவினங்களான நீர் தர ஆய்வுக்கூடம் ஒன்று கட்டவும், ஸ்கேடா (SCADA) முறையில் கணினி மூலம் மேற்பார்வை கூடம் நிறுவி செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்து. தமிழ்நாடு உட்கட்டமைப்பு வளர்ச்சி வாரியம் (TNIDB) இத்திட்டத்தினை பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்பு மூலம்

1. ஒப்பந்ததாரரின் ஆய்வு காலம் ஒரு வருடம், கட்டுமான காலம் நான்கு ஆண்டுகள்
2. இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் 20 ஆண்டுகள்

என்ற முறையில் மொத்தம் 25 ஆண்டுகள் இப்பணிகளை மேற்கொள்ள திட்ட செயலாக்கம் வகுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது முறையாக தகுதி கோரும் ஒப்பந்தப்புள்ளிகள் (RFQ) கடந்த 07.04.2017–ல் கோரப்பட்டதில் நான்கு நிறுவனங்கள் கலந்து கொண்டதில் இரண்டு நிறுவனங்கள் மட்டும் தகுதி பெற்று, ஒப்பந்தவிலைப்புள்ளிகள் (RFP) 18.08.2017–ல் கோரப்பட்டதில் தி/ள். சுயஸ் பிராஜக்ட்ஸ் பிரைவேட் லிட்., (M/S. SUEZ PROJECTS PRIVATE LIMITED) ஹரியானா நிறுவனம் மட்டும் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கியது. அந்நிறுவனத்தின் தொழில்நுட்ப தகுதி மற்றும் ஒப்பந்த விலைப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களுக்கு பணிஅறிவிப்பு கடிதம் (Letter of Award- LOA) கடந்த 24.11.2017–ல் வழங்கப்பட்டு, 08.01.2018–ல் சலுகை ஒப்பந்தம் (Concession Agreement) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டமானது தற்பொழுது JNNURM திட்டத்திலிருந்து AMRUT திட்டத்தில் ரூ.506.04 கோடி மதிப்பில் மேற்கொள்ள ஏழாவது மாநில உயர்நிலை வழிகாட்டு குழுவால் முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளுக்காக மத்திய அரசின் பங்குத் தொகை 33%, மாநில அரசின் பங்குத் தொகை 20% மற்றும் மாநகராட்சியின் பங்குத் தொகை 47% என நிதிப்பங்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கென மாநகராட்சியின் பங்குத் தொகையாக முதற்கட்டமாக இந்நிதியாண்டில் ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டப்பணியானது ஐந்தாண்டுகளில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

### ◆ பூங்காக்கள் மேம்பாடு

அம்ருட் திட்டத்தின் கீழ் 2018–19ம் நிதியாண்டில் இம்மாநகராட்சியில் உள்ள கீழ்க்கண்ட 8 பூங்காக்களை ரூ.505.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | பூங்கா அமைவிடம் | திட்ட மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 34 | திருமுருகன் நகர் | 65.00 |
| 2 | 37 | எஸ். ஆர். கார்டன் | 65.00 |
| 3 | 2 | பி.கே.எல். நகர் | 53.00 |
| 4 | 42 | ஸ்ரீநிவாசா நகர் | 74.00 |
| 5 | 92 | பாலு கார்டன் | 53.00 |
| 6 | 76 | டெக்ஸ்டூல் காலனி | 53.00 |
| 7 | 16 | சூப்பர் கார்டன் | 80.00 |
| 8 | 16 | நியூ கோல்டன் நகர் | 62.00 |
| மொத்தம் | | | 505.00 |



பூங்காக்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள தகுதியான ஒப்பந்ததாரர் தேர்வு செய்யப்பட்டு கடந்த 06.03.2018–ல் பணி உத்திரவு வழுங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அனைத்து பூங்காக்களிலும் அடிப்படை வசதிகள், நடைபயிற்சிக்கென தனியாக நடைபாதை அமைக்கும் பணிகள் மற்றும் குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள் அமைக்கும் பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிதியாண்டில் இப்பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

◆ இணைக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம்



கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளான குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதிகளில் ரூ.589.00 கோடி மதிப்பீட்டில் அம்ருத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக பாதாள சாக்கடை திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி 03.04.2018 ல் கோரப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக மீதமுள்ள 9 இணைக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது. இப்பணிக்கென மாநகராட்சியின் பங்கு தொகையாக முதற்கட்டமாக இந்நிதியாண்டில் ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4. பொறியியல் பிரிவு

### ◆ குடிநீர் அபிவிருத்தித்திட்டம் (பவானி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட பில்லூர் III)



கோயம்புத்தூர் மாவட்டம், தமிழ்நாட்டிலுள்ள வளமான மாவட்டங்களில் ஒன்று. தொழில் கட்டமைப்பு மட்டுமல்லாது வேளாண்மை வளமும் ஒருங்கே பெற்றமைந்ததே இம்மாவட்டத்தின் சிறப்பாகும். கோவை நகரம் 1981ம் ஆண்டில் மாநகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டது. 25.10.2011 முதல் மாற்றியமைக்கப்பட்ட எல்லை வரையறைப்படி 3 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள் மற்றும் 1 ஊராட்சி இணைக்கப்பட்டு மொத்தப் பரப்பளவாக 257.04 ச. கி.மீ. அளவில் கோவை மாநகராட்சி விரிவாக்கப்பட்டுள்ளது. விரிவுபடுத்தப்பட்ட கோவை மாநகராட்சியின் 2011–ம் ஆண்டின் மக்கள் தொகை 16,17,111 இதனடிப்படையில் கோவை மாநகராட்சியின் 2035–ம் ஆண்டின் இடைக்கால மக்கள் தொகை 24,87,500 மற்றும் 2050–ம் ஆண்டின் உச்சநிலை மக்கள் தொகை 32,79,000 என்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மேற்படி மக்கள் தொகையின் குடிநீர்த் தேவை நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 135 லிட்டர் வீதம் இடைநிலை ஆண்டிற்கு (2035) நாளொன்றுக்கு 429.75 மில்லியன் லிட்டர் எனவும், உச்ச நிலை ஆண்டிற்கு (2050) நாளொன்றுக்கு 565.55 மில்லியன் லிட்டர் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. தற்பொழுது கோவை மாநகராட்சிக்கு சிறுவாணி குடிநீர்த் திட்டம் மற்றும் பில்லூர் நீராதாரத்தைக் கொண்டு கோவை மாநகராட்சிக்கான பிரத்யேக குடிநீர் திட்டம் ஆகிய இரு பெரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் வாயிலாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், ஆழியார் ஆற்றினை ஆதாரமாகக் கொண்ட குறிச்சி–குனியமுத்தூர் கூட்டுக் குடிநீர் திட்டம், மற்றும் பவானி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட கவுண்டம்பாளையம் வடவள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய திட்டங்களின் வாயிலாகவும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய திட்டங்களின் வாயிலாக பெறப்படும் உறுதிப்படுத்தப்பட்ட குடிநீரின் அளவை கணக்கில் கொண்டு, கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு இடைநிலை ஆண்டிற்கு (2035) நாளொன்றுக்கு 178.30 மில்லியன் லிட்டரும், உச்ச நிலை ஆண்டிற்கு (2050) நாளொன்றுக்கு 318.17 மில்லியன் லிட்டர் அளவு குடிநீர் கூடுதலாக தேவைப்படுகிறது. கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, கூடுதல் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ய பவானி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் அபிவிருத்தித் திட்டம் உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், பவானி ஆற்றில் சமயபுரம் அருகில் அமைந்துள்ள மின்வாரிய மின் உற்பத்தி நிலையத் தடுப்பணையில் இருந்து 0.5 கி.மீக்கு முன்பகுதியில் 21.00 மீ விட்டமுள்ள நீர்சேகரிப்பு கிணறு மூலம் இயல்பு நீர் சேகரிக்கப்பட்டு 1829 மி.மீ. விட்டமுள்ள இரும்புக் குழாய்கள் மூலமாக 8.0 கி. மீ. தூரம் நீர் உந்தப்பட்டு தாசனூரில் புதியதாக கட்டப்படவுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நீர் சுத்திகரிக்கப்படும். சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் 1829 மி.மீ. விட்டமுள்ள இரும்புக் குழாய்கள் மூலமாக 9.0 கி.மீ தூரம் கட்டன்மலை அருகில் புதியதாக கட்டப்படவுள்ள நீர் உந்து நிலையம் I க்கு எடுத்துச் செல்லப்பட்டு 73 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள நீர் சேகரிப்பு தரைமட்ட தொட்டியில் சேகரிக்கப்படும். பின்னர் நீருந்து நிலையம் I லிருந்து 1.10 கி.மீ தூரம் குகை வழியாக கட்டன் மலையை கடந்து இராவுத்தநல்லூரில் புதிதாக கட்டப்படவுள்ள 73 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள நீருந்து நிலையம் II ல் சேகரிக்கப்படும். நீருந்து நிலையம் IIல் இருந்து 5.6 கி.மீ. தொலைவில் பன்னிமடை கிராமத்தில் அமையப்பெறவுள்ள 73 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள நீர் சேகரிப்பு தரைமட்ட தொட்டியில் சேகரிக்கப்படும்.

கோயம்புத்தூர் மாநகராட்சி குடிநீர் விநியோகம் 6 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, மண்டலத்திற்கு ஒன்று வீதம், 6 பிரதான மேல்நிலைத் தொட்டிகள் அமைத்து ஏற்கனவே அமையப்பெற்ற / புதியதாக கட்டப்படவுள்ள மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் பகிர்மானக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகிக்க விரிவான திட்ட அறிக்கை ரூ.1018.00 கோடிக்கு தயாரிக்கப்பட்டு தற்சமயம் நிலஆர்ஜிதம் செய்யும் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய் அலுவலர்கள் தலைமையில் 9 கிராமங்களுக்கான நில அளவீடு மேற்கொள்ளப்பட்டு ஆர்ஜிதப்பணிகள் நடைபெற்று வருகின்றது.

நில ஆர்ஜிதத்திற்கான தொகை மாநில அரசு மானியமான மூலதன நிதியிலிருந்து (Capital Grant Fund) ரூ.30.00 கோடி பெறுவதற்கான நடவடிக்கையில் உள்ளது. மீதமுள்ள ரூ.100.00 கோடி மாநகராட்சி நிதியிலிருந்து செலவிடப்படவேண்டியுள்ளது. மேலும் 02.03.2018 அன்று TNUIFSL நிறுவனம் மற்றும் ஆசியன் வளர்ச்சி வங்கி (ADB) ஆலோசகர் முன்னிலையில் நடைபெற்ற திட்ட அறிக்கை தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் பிரதான குழாய் விட்டம் மற்றும் நீர் சேகரிப்பு கிணறுகள் அமைப்பது பற்றி விரிவாக ஆலோசிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான இறுதி திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி, தொழில் நுட்ப அனுமதி மற்றும் ஆசியன் வளர்ச்சி வங்கி ஒப்புதல் பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இந்நிதியாண்டில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். நில ஆர்ஜிதம் மற்றும் திட்டப்பணிக்கென இந்நிதியாண்டில் ரூ.20.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ◆ டாக்டர் எம்.ஜி.ஆர். மொத்த காய்கனி விற்பனையகத்தினை இடமாற்றம் செய்து நவீனப்படுத்துதல்

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட மேட்டுப்பாளையம் சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்திற்கு எதிர்புறத்தில் 3.00 ஏக்கர் நிலப்பரப்பில் டாக்டர் எம்.ஜி.ஆர் காய்கறி சந்தையில் 112 கடைகள் செயல்பட்டுவருகிறது. இங்கு தினசரி 100



முதல் 150 எண்ணிக்கையிலான கனரக வாகனங்களும், 200 எண்ணிக்கைக்கும் மேற்பட்ட சிறு வாகனங்களும் வந்து செல்கின்றன. தினந்தோறும் 1300 டன் வரை காய்கறிகள் விற்பனைக்காக வருகின்றன. மேலும் பேருந்து நிலையத்திற்கு வரும் பேருந்துகள் மற்றும் சந்தைக்கு வரும் வாகனங்களால் மேட்டுப்பாளையம் சாலையில் பெரிதும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மழைக்காலங்களில் இச்சந்தையில் மழைநீர் தேங்குவதால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். எனவே இந்த மொத்த காய்கறி விற்பனையகத்தினை மேட்டுப்பாளையம் சாலையில் 35 ஏக்கர் பரப்பளவில் உள்ள உரக்கிடங்கு வளாகத்தில் 12 ஏக்கர் பரப்பளவில் சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்து திறன்மிகு நகரம் (Smart City) திட்டத்தின் கீழ் அல்லது மாநகராட்சி நிதியிலிருந்து நிதிஒதுக்கீடு செய்து ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டுவதன் மூலம் கூடுதல் எண்ணிக்கையிலான கடைகள் மற்றும் கூடுதல் வாகனம் நிறுத்துமிடம் அமைக்க இந்நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதனால் மாநகராட்சிக்கு கூடுதல் வருவாய் ஈட்ட இயலும்.

### ◆ எல்.இ.டி. தெருவிளக்குகள் (ESCO - II)



கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 40 வார்டுகளில் ESCO – I ன் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள மின் சேமிப்பு திட்டம் மூலம் 44.20% மின் சேமிப்பு ஏற்படுகிறது.

இரண்டாம் கட்டமாக மாநகராட்சியின் பழைய 60 வார்டுகளில் உள்ள 50534 எண்ணிக்கையிலான 70 / 250 வாட்ஸ் சோடிய ஆவி விளக்கு, 40 வாட்ஸ் குழல் விளக்கு, CFL, T5 விளக்குகள் போன்ற வகையான தெருவிளக்குகளை 20 வாட்ஸ், 30வாட்ஸ்,

48 வாட்ஸ், 80 வாட்ஸ் மற்றும் 120 வாட்ஸ் ஒளி மின் உமிழ் (LED) தெருவிளக்குகள் மற்றும் மின்சேமிப்பு சாதனங்கள் பொருத்தி 100 % தனியார் பங்களிப்பு நிறுவனம் மூலம் (PPP on BFOT basis) இயக்கி பராமரிக்க ரூ.50.00 கோடி திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி பிரேரணை அரசுக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

இப்பணி முடிவுறும் தருவாயில் 47.81% மின் சேமிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் திட்ட மதிப்பீடு தொகை அனைத்தும் மாநகராட்சிக்கு சேமிப்பாகும்.

அரசின் வழிகாட்டுதலின் படி இத்திட்டம் செயல்படுத்தப்படும். தனியார் நிறுவனத்திற்கு மின் சேமிப்புத் தொகை பகிர்ந்து அளிக்கப்படும். எனவே இப்பணிக்கான அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி மேற்கொள்ள இந்நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### ❖ சங்கனூர் பள்ளம் சீரமைப்பு



கோயம்புத்தூர் மாநகரில் அமைந்துள்ள இயற்கை வடிகால்களில் சங்கனூர் பள்ளம் முக்கியத்துவம் பெற்றதாகும்.

இந்த இயற்கை வடிகால் கவுண்டம்பாளைம் சங்கனூர் பகுதியில் தொடங்கி சிங்காநல்லூர் வழியாக நொய்யல் ஆற்றை சென்றடையும் படி அமைந்துள்ளது. இது கோவை நகரின் வடமேற்கில் தொடங்கி தென்கிழக்கில் முடியும் வகையில் தனது பாதையை கொண்டுள்ளது. இதன் நீளம் சுமார் 11.50 கி.மீ. ஆகவும், 25 முதல் 40 மீட்டர் அகலம் கொண்ட இயற்கை அரணாகவும், கால்வாயின் அருகில் உள்ள குடியிருப்போர் மற்றும் விவசாய நிலங்களை காக்கும் வண்ணமும் அமைந்துள்ளது.

ஆனால் தற்போது சங்கனூர் பள்ளத்தின் இருபுறமும் தனியார் மற்றும் தொழிற்சாலைகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இதன் வழித்தடங்கள் குறுகலாகி

விட்டது. இதனால் மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அதிகஅளவில் பொருட்சேதமும் சில நேரங்களில் உயிர்ச் சேதமும் உருவாகும் நிலை உள்ளது.

எனவே, இயற்கை வடிகாலான சங்கனூர் பள்ளத்தின் கரையோரங்களை பலப்படுத்தி சீரமைத்து கரைகளின் இருபுறமும் நடைபாதை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் மழைக்காலங்களில் வெள்ள அபாயம் ஏற்படாமல் தடுக்கவும், பள்ளத்தின் இருபுறமும் பாதை அமைப்பதன் மூலம் பொது மக்களின் போக்குவரத்து நெரிசல் பிரச்சினைக்கு தீர்வு காணவும் முதற்கட்டமாக (Phase-I) திருத்திய விரிவானத் திட்ட அறிக்கைக்கான திட்ட மதிப்பீடு ரூ.190.00 கோடிக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திருத்திய விரிவான திட்ட அறிக்கை முன்மொழிவுகள், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி வளர்ச்சிக் கழகத்தின் (TNUIFSL) ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் தி/ள். சன்கான் இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், புனே நிறுவனத்தால் தற்சமயம் இப்பணிக்காக களஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆய்வறிக்கையின் படி ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு பணிகளை துவக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஒப்புதல் மற்றும் நிதி ஆதாரம் கிடைக்கப்பெற்றவுடன் இத்திட்டத்தை இந்நிதியாண்டில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### ◆ தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்புத் திட்டம்



கோயம்புத்தூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிக்கான சேதமடைந்துள்ள சாலைகள் 69.14 கி.மீ நீளத்திற்கு சீரமைப்பு செய்வதற்கான தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் (TURIP) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் மதிப்பீடு ரூ40.00 கோடிக்கு 02.02.18ம் தேதியில் நிர்வாக அனுமதி மற்றும் 19.02.2018ம் தேதியில் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு

நடவடிக்கையில் உள்ளது. இப்பணிகள் அனைத்தும் இந்நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டு சாலைகள் சீரமைக்கப்படும்.

### ◆ தடாகம் சாலையில் உள்ள அவிலா பள்ளி அருகில் சுரங்க நடைபாதை அமைத்தல்



கோயம்புத்தூர் மாநகராட்சி தடாகம் சாலையில் அவிலா பள்ளி அருகே உள்ள சந்திப்பில் பள்ளிக்கு செல்லும் மாணவ மாணவிகள் மற்றும் அரசு தொழில்நுட்ப கல்லூரிக்கு செல்லும் மாணவ மாணவிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் நாள்தோறும் தடாகம் சாலை மற்றும் என்.எஸ்.ஆர் சாலை சந்திப்பை கடந்து செல்கின்றனர். அதிக போக்குவரத்து உள்ள இச்சாலையில் பொதுமக்கள் எளிதாக கடக்க ஏதுவாக ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் சுரங்க நடைபாதை அல்லது உயர்மட்ட நடைபாதை அமைக்க சாத்தியக் கூறுகள் குறித்து ஆராய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்கென இந்நிதியாண்டில் முதற்கட்டமாக ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ◆ பதிவறை கட்டுதல்



இம்மாநகராட்சியின் பிரதான அலுவலகத்தில் பொதுப் பிரிவு, பொதுக் கணக்குப் பிரிவு, பொறியியல் பிரிவு, பொது சுகாதாரப் பிரிவு, நகரமைப்புப் பிரிவு, கல்விப் பிரிவு, மாமன்றப் பிரிவு, குடிநீர் விநியோக கணக்குப் பிரிவு மற்றும் கோயம்புத்தூர் ஸ்மார்ட் சிட்டி அலுவலகம் முதலிய பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இப்பிரிவுகளில் கையாளப்படும் கோப்புகளில் முடிவுற்ற கோப்புகள் பதிவறைக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். அவ்வாறு ஒப்படைக்கப்படும் போது அனைத்து பிரிவுகளிலும் முடிவுற்ற

கோப்புகளை பாதுகாத்து வைப்பதினால் ஏற்படும் இடநெருக்கடி வெகுவாக குறையும். இதனால் பணியாளர்கள் கோப்புகளை எளிதாக கையாள இயலும்.

தற்போது பிரதான அலுவலகத்தில் உள்ள பதிவறையில் முடிவுற்ற கோப்புகளை கையாளுவதற்கு போதிய இடவசதி இல்லாமல் உள்ளதாலும், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அரசு முதன்மை செயலாளர் அவர்களின் ஆய்வறிக்கையில் புதிதாக பதிவறை கட்ட பரிந்துரை செய்துள்ளதாலும் அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய பதிவறையினை ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு இந்நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### ◆ மழைநீர் சேகரிப்பு திட்டம்




போதிய மழைப்பொழிவு இல்லாத காரணத்தால் மாநகரப் பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்துள்ளதால் ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகளின் நீர்மட்டம் குறைந்துள்ளது. இதனை தவிர்க்கும் பொருட்டு மாநகரப் பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளிலும் உள்ள மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் அமைக்க போதிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன் மாநகராட்சிக்கு சொந்தமான அலுவலகங்கள், பள்ளி வளாகங்கள், பூங்காக்கள், மகப்பேறு மருத்துவமனைகள், பேருந்து நிலையங்கள், அம்மா உணவகங்கள், வணிக வளாகங்கள் மற்றும் விளையாட்டு திடல்களில் மழை நீர் சேகரிப்பு தொட்டிகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. திடக்கழிவு மேலாண்மை

◆ வெள்ளலூர் குப்பை கிடங்கு பராமரிப்புக்கென பிரத்யேக நவீன வகை புல்டோசர் இயந்திரம் (CRAWLER TYPE BULL DOZER) கொள்முதல் செய்தல்

இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகளில் சேகரம் செய்யப்படும் சுமார் 600 மெட்ரிக் டன் அளவிலான திடக்கழிவுகள் வெள்ளலூர் குப்பைகிடங்கு வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள இயற்கை உரம் தயாரிக்கும் ஆலை மற்றும் மண்புழு உரம் தயாரிக்கும் ஆலையில் கொணர்ந்து சேகரிக்கப்படுகிறது.



இது போக சுமார் 390 மெட்ரிக் டன் அளவிலான கழிவுகள் குப்பைகிடங்கு வளாகத்திற்குள் திறந்தவெளியில் கொட்டப்பட்டுவருகிறது. அதிகப்படியான வெப்பநிலை மற்றும் வெப்பத்தின் காரணமாக கழிவுகளில் அடிக்கடி தானாக ஏற்படும் தீயினால் குப்பைக்கிடங்கு சுற்றியுள்ள பகுதிகளில் புகை மற்றும் சுற்றுச்சூழல் மாசு ஏற்படுகிறது. மேற்படி தீயினை கட்டுக்குள் கொண்டுவந்தவுடன் எரிந்த நிலையில் உள்ள குப்பைகளின் மீது மண் மூலம் மூடப்பட்டு மேலும் தீ பரவாமல் தடுக்கும் புல்டோசர் இயந்திரம் இம்மாநகராட்சி வசம் இல்லை. எனவே, வெள்ளலூர் குப்பைகிடங்கு பராமரிப்புக்கென பிரத்தியேகமாக நவீனவகை புல்டோசர் இயந்திரம் (CRAWLER TYPE BULL DOZER) ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் தமிழக அரசு திடக்கழிவு மேலாண்மை சிறப்பு நிதியிலிருந்தோ அல்லது தூய்மை இந்தியா திட்டத்தின் நிதியிலிருந்தோ கொள்முதல் செய்யப்படும்.

◆ **குப்பை கிடங்கு வளாகத்திற்குள் சமூக விரோதிகள் நுழைவதை கண்காணிக்கும் பணிகளுக்கும் இம்மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டப்பணிகளுக்கான அளவியல் பணிகளை மேற்கொள்வதற்கும் ட்ரோன் எனப்படும் ஆளில்லா விமானம் (UNMANNED AERIAL VEHICLE/ DRONE) கொள்முதல் செய்தல்**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான 650 ஏக்கர் பரப்பளவிலான குப்பை கிடங்கு வளாகத்தில் நாளொன்றிற்கு சுமார் 990 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு அதில் 600 மெட்ரிக் டன் அளவிலான கழிவுகளை மட்டுமே கையாளக்கூடிய வகையில் வெள்ளலூர் குப்பை கிடங்கு வளாகத்தில் இயற்கை உரம் மற்றும் மண்புழு உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது.



கூடுதலாக சேகரிக்கப்படும் 390 மெட்ரிக் டன் அளவிலான திடக்கழிவுகள் திறந்த வெளியில் கொட்டப்பட்டு வருகிறது. இது தவிர ஏற்கனவே சுமார் 10 இலட்சம் மெட்ரிக் டன் அளவில் திறந்த வெளியில் கொட்டப்பட்டுள்ள பழைய திடக்கழிவுகளில் அடிக்கடி தீப்பிடிக்கும் சூழ்நிலை சமூக விரோதிகளால் உருவாகிறது. குப்பை கிடங்கு வளாகத்திற்குள் சமூக விரோதிகள் நுழைவதை கண்காணிக்கும் பணிகளுக்கும் இம்மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டப்பணிகளுக்கான அளவியல் பணிகளை மேற்கொள்வதற்கும் ட்ரோன் எனப்படும் ஆளில்லா விமானம் (UNMANNED AERIAL VEHICLE/ DRONE) ஒன்றினை புதியதாக வாங்குவதற்கு ரூ.40.00 இலட்சம் இந்நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**◆ வெள்ளலூர் குப்பைக்கிடங்கு பராமரிப்புக்கென பிரத்யேகமாக நவீன வகை நீர் பீய்ச்சி வாகனம் (FIRE TENDER VEHICLE CUM WATER BOUSER) கொள்முதல் செய்தல்**

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான 650 ஏக்கர் பரப்பளவிலான குப்பை கிடங்கு வளாகத்தில் தற்சமயம் தனியார் நிறுவனத்தினால் நிறுவப்பட்டுள்ள இயற்கை உரம் தயாரிக்கும் ஆலையில் அதனை இயக்கி பராமரிக்கும் நிறுவனத்தாருக்கு ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள குப்பைகளின் அளவினை விட கூடுதலாக சேகரம் செய்யப்படும் குப்பைகள் முறையே மண்புழு உரம் தயாரிக்கும் ஆலையில் கழிவு செய்யப்பட்டும், மீதமுள்ள குப்பைகளை குப்பைக்கிடங்கிலுள்ள ஒரு காலியிடத்தினை



தேர்வு செய்து அவ்விடத்தில் கொட்டப்பட்டு வருகிறது. அவ்வாறு கொட்டப்பட்டு வரும் குப்பைகளில் ஏற்படும் தீயினை தண்ணீர் பீய்ச்சி அணைக்கும் பணி மேற்கொள்ளப்படுவதுடன், கொசு மற்றும் ஈ தொல்லைகளை கட்டுப்படுத்துதல், குப்பைகளிலிருந்து வெளியேறும் துர்நாற்றத்தினை கட்டுப்படுத்துவதற்கும் நுண்ணுயிர் நாசினி கலவை மற்றும் மூலிகை மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய பணிகளை மேற்கொள்வதற்கு தேவைப்படும் வஜ்ரா/வருண் போன்ற நீர் பீய்ச்சி வாகனங்கள் இம்மாநகராட்சி வசம் இல்லாததால் தற்சமயம் தண்ணீர் பீய்ச்சி அணைக்கும் பணிக்கு தேவைப்படும் நீர் பீய்ச்சி வாகனங்களை தமிழ்நாடு தீ அணைப்புத்துறை மற்றும் மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் அதிரடிப்படை முகாமிலிருந்தும் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சில சமயங்களில் மேற்படி நீர் பீய்ச்சி வாகனங்கள் குறித்த நேரத்தில் கிடைக்கப்பெறாத காரணத்தினால் மேற்கூறிய பணிகளை மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்படுகிறது.

இதனால் சுற்றுச்சூழல் மாசுபட்டு பொது மக்கள் மிகுந்த பாதிப்பிற்குள்ளாகின்றனர். மேற்கூறிய நீர் பீய்ச்சி வாகனம் இம்மாநகராட்சி வசம் இருக்க வேண்டியதின் அவசியத்தினைக் கருத்தில் கொண்டு வெள்ளலூர் குப்பைக்கிடங்கு பராமரிப்புக்கென பிரத்யேகமாக நவீன வகை நீர் பீய்ச்சி வாகனம் ஒன்று புதியதாக வாங்குவற்கு ரூ.60.00 இலட்சம் இந்நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. பொது சுகாதாரப்பிரிவு

### ◆ நாய்கள் பாதுகாப்பு மையம் அமைத்தல்




கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் சுற்றித்திரியும் தெருநாய்களை பிடித்து மாநகராட்சி அனுமதியுடன் 2 தனியார் நிறுவனம் மூலம் கருத்தடை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒரு கால்நடை மருத்துவ அலுவலர், பணியாளர்கள் மற்றும் மருந்தகத்துடன் (Small Veterinary Dispensary) ஒருங்கிணைந்து மாநகராட்சி கால்நடை மருத்துவ அலுவலர் மேற்பார்வையில் "நாய்கள் பாதுகாப்பு மையம் "அமைத்தால் தெருக்களில் நோய்வாய்ப்பட்டு மற்றும் அடிபட்டு காயங்களுடன் பொது மக்களுக்கு இடையூறாக சுற்றித்திரியும் தெருநாய்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க இயலும்.

எனவே, நாய்கள் பாதுகாப்பு மையம் Outsourcing மூலம் கால்நடை மருத்துவ அலுவலர், பணியாளர்கள் நியமனம் செய்தல், மருந்துகள் வாங்குதல், மையம் பராமரிப்பு செய்தல் பணிகளுக்காக இந்நிதியாண்டில் ரூ.150.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ◆ நகர்ப்புற சுகாதார மையங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்துதல்



கோயம்புத்தூர் மாநகராட்சியின் கீழ் செயல்பட்டு வரும் அனைத்து நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களிலும் பொது மக்கள் மற்றும் நோயாளிகளின் பாதுகாப்பினை உறுதி செய்யும் விதமாக கண்காணிப்பு சாதனங்களுடன் கூடிய கேமரா (CC TV Camera) பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்காக இந்நிதியாண்டில் ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ◆ தூய்மை பாரத திட்டம்




கோயம்புத்தூர் மாநகராட்சி கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் “தூய்மை பாரதம்” திட்டத்தை மிகவும் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளை திறந்த வெளி கழிப்பிடம் இல்லா நகராகவும், சுத்தமான நகராக மாற்றுவதே தூய்மை பாரதம் திட்டத்தின் குறிக்கோள்.

இதை நிறைவேற்றும் விதமாக கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள வார்டுகளை திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத பகுதிகளாக மாற்றுவதற்காக தனிநபர் கழிப்பறைகள், பொது மற்றும் சமுதாய கழிப்பறைகள் கட்டுவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் கோவையை குப்பை இல்லாத நகராகவும், சமூகம் உந்துதல் மூலம் செயல்படும் பல்வேறு திடக்கழிவு மேலாண்மை திட்டங்களும் செயல்படுத்த திட்டமிடப்பட்டது.

கோயம்புத்தூர் மாநகராட்சி பல்வேறு திடக்கழிவு மேலாண்மை துவக்க முயற்சிகளை தூய்மை பாரதம் திட்டத்தின் கீழ் செயல்படுத்தி வருகிறது. கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு பகுதிகளிலும் வீடு வீடாக குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாக தரம் பிரித்து வாங்கும் முயற்சி செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் கிடைக்கும் மக்கும் குப்பைகளை வெள்ளலூர் உரக் கிடங்கில் உள்ள உரம் தயாரிக்கும் ஆலையில் – மண் புழு உரம் தயாரித்து உழவர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும் மக்காத குப்பைகளை மறுசுழற்சி செய்வதற்காக – மறுசுழற்சி செய்யும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் வருவாய் துப்புரவு பணியாளர்களுக்கு ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது.

## ◎ தனிநபர் கழிப்பிடம்



கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் தனிநபர் கழிப்பறை இல்லாத 6056 பயனாளிகள் அடையாளம் காணப்பட்டு 2015 ஆம் ஆண்டு முதல் தனிநபர் கழிப்பறைகள் கட்டும் பணி துவங்கப்பட்டது. இதுவரை 4862 தனிநபர் கழிப்பறைகள் கட்டப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆண்டு 1500 தனிநபர் கழிப்பறைகள் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

## ◎ என் குப்பை என் பொறுப்பு



கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் புது வித முயற்சியாய் சமூக உந்துதலுடன் செயல்படும் திட்டமாக – நோ டம்பிங் திட்டத்தை கூட்டு குடியிருப்புகள், அப்பார்ட்மெண்ட்கள், கல்லூரிகள் ஆகியவற்றில் தொடங்கப்பட்டது. இதில் சுமார் 5440 குடும்பங்கள் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்த திட்டத்தில் இருக்கும் குடும்பங்கள் மற்றும் குடியிருப்போர் நலசங்கங்கள் தினமும் குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து வழங்கி வருகின்றன. இந்த திட்டத்தில் செயல்படும் இளைய சமூக தொழில் முனைவோர் தரம் பிரித்த குப்பைகளை உரமாகவும், மறுசுழற்சி பொருளாகவும் மாற்றி குப்பைக் கிடங்கிற்கு குப்பைகள் செல்லாத வண்ணம் செயல்பட்டு வருகின்றனர். மேதகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 15.11.2017 அன்று இந்த திட்டத்தை நேரில் பார்வையிட்டு பாராட்டினார். இத்திட்டத்தை மேலும் பல அப்பார்ட்மெண்ட் பகுதிகளுக்கு கொண்டு செல்ல இந்த ஆண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## ◎ திறந்த வெளி கழிப்பிடம் இல்லாத மாநகராட்சி




கோயம்புத்தூர் மாநகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் புதியதாக 37 பொது மற்றும் சமுதாய கழிப்பறைகள் கட்டி முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மக்களுக்காக 371 பொது மற்றும் சமூக கழிப்பறைகள் நகரின் பல்வேறு பகுதிகளிலும், 4862 தனிநபர் கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இதன் மூலம் கோயம்புத்தூர் மாநகராட்சி

05.12.2017 முதல் திறந்த வெளி கழிப்பிடமில்லாத நகரம் என்று இந்திய தர நிறுவனம் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தால் சான்றளிக்கப்பட்டுள்ளது.

### ◎ கூகுள் வரைபடத்தில் கழிப்பறை அமைவிடம் அறியும் வசதி




தமிழகத்தில் முதல் முறையாக கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள 371 பொது / சமுதாய கழிப்பறைகளை கூகுள் வரைபடத்தில் தனிப்பட்ட ஐடியுடன் ஸ்வச்சேதா பொது / சமுதாய கழிப்பறைகள் என இணைக்கப்பட்டுள்ளது. இதனை பொதுமக்கள் பயன்படுத்தி பயன்பெற்று வருகின்றனர்.

### ◆ உக்கடம் கழிவுநீர் பண்ணையில் கழிவுநீர் லாரிகள் கழிவுநீரை வெளியேற்றும் இடத்தில் பாதுகாவலர் அறை மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வைக்கும் அறை அமைத்தல்

தினந்தோறும் மாநகராட்சி பகுதியிலுள்ள 5 மண்டலங்களிலும் பல்வேறு குடியிருப்பு பகுதிகளிலிருந்து செப்டிக் டேங்க் (Septic Tank) கழிவுநீரை மாநகராட்சியில் அனுமதி பெற்ற தனியார் கழிவு நீர் அகற்றும் லாரிகள் எடுத்துக் கொண்டு வந்து உக்கடம் பகுதியில் உள்ள மாநகராட்சியால் ஒதுக்கப்பட்ட இடத்தில் காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை கொட்டுகின்றனர். அந்த இடத்தில் எத்தனை முறை கொட்டுகின்றனர் என பதிவு செய்வதற்கும், முறையாக பதிவேடுகள் பராமரிக்கப்படுவதற்கும், வந்து செல்லும் லாரிகள் முறையாக விதிமுறைகளை பின்பற்றுகின்றனவா மற்றும் மாநகராட்சி அனுமதி பெற்ற லாரிகள் மட்டும் கழிவுகளை கொட்டுகின்றனவா என்பதை கண்காணிப்பதற்கும், ஆய்வு செய்வதற்கும் பாதுகாப்பு உபகரணங்களை வைப்பதற்கும், அவ்விடத்தில் பாதுகாவலர் அறை (10'x10') மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வைக்கும் அறை (20' x 10') தடுப்பு கட்டைகள் அமைப்பது மிகவும் அவசியமானதாகும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. நகரமைப்பு பிரிவு

### ◆ திட்டசாலை பணிகள்



கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்ட சாலை / இணைப்பு சாலை / சாலை விரிவாக்கம் உள்ளிட்ட பணிகளுக்காக, நடப்பு ஆண்டில் திட்ட சாலை CC '60 - AA '60 அடி செல்வ சிந்தாமணி குளக்கரை அருகில் செல்வபுரம் ஹவுசிங்யூனிட் சாலையுடன் இணைப்பு உத்தேசத்திற்கு நில ஆர்ஜிதத் தொகை மற்றும் சாலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ. 20.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ◆ பொது ஒதுக்கீடு இடங்களில் ஆக்கிரமிப்பு அகற்றுதல்



இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பொது ஒதுக்கீடு இடங்கள், சாலைகள் மற்றும் மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பொது ஒதுக்கீடு இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டும், சுத்தப்படுத்தியும் கம்பிவேலி அமைத்துப் பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது. 2017–2018ம் ஆண்டில் மட்டும் 65 மனைப்பிரிவு பொது ஒதுக்கீடு இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டும் / சுத்தப்படுத்தியும் கம்பிவேலி அமைத்து பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது. இப்பொழுது ஒதுக்கீடு இடங்களின் மொத்த பரப்பளவு 21.60 ஏக்கர் இதன் மதிப்பு

தோராயமாக ரூ.190.14 கோடியாகும். மேலும், ஆக்கிரமிப்புகள் அகற்றும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொது ஒதுக்கீடு இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி வேலி அமைத்துப் பாதுகாக்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதற்கென இந்நிதியாண்டில் ரூ. 50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ◆ அனுமதியற்ற விளம்பர பலகைகள் அகற்றுதல்




கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி வைக்கப்படும் விளம்பர பலகைகள் / விளம்பர பதாகைகளை மண்டல வாரியாக ஆய்வு செய்யப்பட்டு அகற்றப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் மட்டும் 2500க்கும் மேற்பட்ட அனுமதியற்ற விளம்பரங்கள் அகற்றப்பட்டுள்ளது. மேலும், அனுமதியற்ற விளம்பரங்களை அகற்றுவதற்கு பிரத்யேகமான வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் பயன்படுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ள ரூ.25.00 இலட்சம் இந்நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ◆ அனுமதியற்ற மனைப்பிரிவுகள் / மனையிடங்கள் வரன்முறைபடுத்துதல்



அனுமதியற்ற மனைப்பிரிவுகள் / மனையிடங்களை வரன்முறைபடுத்த அரசாணை (நிலை) எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ.4(3))த் துறை, நாள்.04.05.2017 மற்றும் அரசாணை (நிலை) எண்.175, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (ந.வ.4(3))த் துறை, நாள்.13.10.2017

வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணைகளின் படி உள்ளூர் திட்டக் குழுமத்தின் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் பெறப்பட்டபின்னர், தனிப்பட்ட மனைகளை மாநகராட்சியால் வரன்முறை செய்து உத்திரவிடப்படுறது. மேற்படி மனைகளை வரன்முறைப்படுத்த அரசு கணக்கில் வரன்முறை கட்டணமாக சதுர மீட்டருக்கு ரூ.100/- வீதமும், மாநகராட்சிக்கு அபிவிருத்தி கட்டணமாக சதுர மீட்டருக்கு ரூ.500/- வீதமும் செலுத்தப்படவேண்டும். மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கண்டறியப்பட்ட அனுமதியற்ற 663 மனைப்பிரிவுகளில் தோராயமாக 35000 மனையிடங்கள் வரை உள்ளது. மேற்படி அனுமதியற்ற மனையிடங்களை வரன்முறை செய்யும் போது அபிவிருத்திக் கட்டணமாக சதுர மீட்டருக்கு ரூ.500/- வீதம் 2400 சதுர அடி கொண்ட மனையிடம் ஒன்றிற்கு ரூ.1,11,524/- வீதம் செலுத்தப்பட வேண்டும். இதன் மூலம் இந்நிதியாண்டில் ரூ.45.00 கோடி மாநகராட்சிக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 8. கல்விப் பிரிவு

### ◆ விளையாட்டு போட்டிகள்

இம்மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரது விளையாட்டுத்திறனை ஊக்குவிக்கும் பொருட்டு மாநகராட்சிப் பள்ளி மாணவர்களுக்கிடையே வயது அடிப்படையில் 14 வயது மற்றும் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான நிலைகளில் கீழ்காண் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட உள்ளது.



- தடகளப்போட்டிகள்
- கோ – கோ
- கைப்பந்து
- கபடி

மேற்படி போட்டிகள் நடத்திட, தேவையான விளையாட்டு உபகரணங்கள் வாங்கவும், போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெறும் மாணவ,மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென இந்நிதியாண்டில் ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ◆ மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு ஸ்கேட்டிங் பயிற்சிகள்



மாநகராட்சி பள்ளிகளில் 5 முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களில் ஸ்கேட்டிங் விளையாட்டில் ஆர்வமும், திறமையும் உள்ள 50 மாணவ, மாணவியரை தேர்வு செய்து, அவர்தம் திறமையை மேம்படுத்திட இம்மாநகராட்சி வ.உ.சி. பூங்கா அருகிலுள்ள ஸ்கேட்டிங் மைதானத்தில், ஸ்கேட்டிங் பயிற்சியாளரை கொண்டு பயிற்சி வழங்கப்பட உள்ளது. இதன் மூலம் மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் தனியார் பள்ளி மாணவியர்களுக்கு இணையாக இவ்விளையாட்டில் பயிற்சி பெறுவர். மேற்படி ஸ்கேட்டிங் பயிற்சிகள் மேற்கொள்ளும் மாணவ, மாணவியருக்கு ஸ்கேட்டிங் பயிற்சி உபகரணங்கள் வாங்கி, வழங்கிடவும், பயிற்சியாளர் கட்டணம் மற்றும் செலவினங்களை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென இந்நிதியாண்டில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ◆ மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு "Robotic Science" பயிற்சிகள்



இம்மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் கற்றலில் மட்டுமன்றி, அறிவியல் மற்றும் தொழில் நுட்ப பயிற்சிகளில் சிறந்து விளங்கும் வகையிலும், "Robotic Science" அறிந்து கொள்ளும் வகையிலும் கடந்த ஆண்டு 10 மாநகராட்சி மேல்நிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் பயிலும் அறிவியலில் ஆர்வமும், திறமையும் உள்ள மாணவ, மாணவியரில் பள்ளி ஒன்றிற்கு தலா 50 மாணவ, மாணவியர் வீதம் 500 மாணவ, மாணவியருக்கு ரோபோட்டிக் அறிவியல் "Robotic Science" பயிற்சிகள் 2017 –2018ஆம் நிதியாண்டில் வழங்கப்பட்டன. வரும் கல்வியாண்டிலும் இப்பயிற்சிகளை மாநகராட்சி 16 மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் திறமையும், அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில் ஆர்வமும், உள்ள மாணவ, மாணவியரை பள்ளிக்கு தலா 50 பேர் வீதம் தேர்வு செய்து பயிற்சி வழங்கிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கென இந்நிதியாண்டில் ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2017-2018 ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் இடம் பெற்ற அறிவிப்புகளின் தற்போதைய நிலை மற்றும் பணி முன்னேற்ற விபரங்கள்

### 1. திறன்மிகு நகரம் (Smart City)

❖ கழிவு மேலாண்மை (Smart Waste Management)

கடந்த 2017–18ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் திறன்மிகு நகர திட்டத்தில் பகுதி சார்ந்த வளர்ச்சியின் (ABD) அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ள வார்டுகளில் ரூ23.00 கோடி திட்ட மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மாநகர தெருக்களில் சேகரமாகும் கழிவுகளை அவை உருவாகும் இடத்திலேயே மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து அவற்றில் மக்காத குப்பைகளை மறுபயன்பாட்டிற்கு விற்பனைக்கு அனுப்பி அதன் மூலம் பெறப்படும் வருவாயினை வீடுவீடாக திடக்கழிவு சேகரம் செய்யும் துப்புரவு பணியாளருக்கே ஊக்கத் தொகையாக வழங்கும் விதமாக திட்டம் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டது. மேலும் இத்திட்டத்திற்கு தேவையான வாகனங்கள், தளவாடப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யவும் உத்தேசிக்கப்பட்டது. ஆனால் இத்திட்டத்திற்கு மாற்றாக வெள்ளலூர் பகுதியில் இம்மாநகராட்சி பகுதிகளில் சேகரம் செய்யப்படும் 600 மெட்ரிக் டன் அளவிலான திடக்கழிவுகளுக்கு மேல் கூடுதலாக சேகரம் செய்யப்படும் 390 மெட்ரிக் டன் அளவிலான திடக்கழிவுகளை முறையாக கையாண்டு மேலாண்மை செய்வதற்கென கூடுதலாக 600 மெட்ரிக் டன் அளவிலான புதிய திடக்கழிவு மேலாண்மை ஆலையினை அமைப்பதற்கான கட்டமைப்புகளை நிறுவுவதற்கு ரூ.11.50 கோடி நிதியினை ஒதுக்கி கடந்த 09.06.2017 அன்று நடைபெற்ற கோயம்புத்தூர் ஸ்மார்ட் சிட்டி லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர்கள் நிர்வாக சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு மேற்படி திட்டத்தினை 8 சிப்பங்களாகப் பிரித்து செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டு அப்பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு தற்சமயம் பணிகள் நடைபெற்று

வருகின்றன. மேற்படி புதியதாக நிறுவப்படும் திடக்கழிவு மேலாண்மை ஆலைக்குத் தேவையான திடக்கழிவுகளிலிருந்து எரிபொருள் (Refuse Derived Fuel) தயாரிக்கும் இயந்திரங்கள் கொள்முதல் செய்து நிறுவுதல் பணிகளுக்காக ரூ.13.35 கோடி மதிப்பீட்டில் திறன்மிகு நகரத் திட்டத்தின் கீழ் வரும் 2018–19ம் நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

### ❖ காற்றுத் தர உணர்வு மற்றும் கண்காணிப்பு கனிணி சாதனம் (City Sense & Air quality Monitoring IOT device)

சுற்றுச் சூழலின் தன்மையைக் கண்டறிந்து மேம்படுத்தும் விதமாக ரூ.11.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 30 இடங்களில் காற்றுத் தர அளவீட்டு சாதனங்கள் பொருத்தப்பட்டு, கடந்த ஜூன்–2017 முதல் பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

### ❖ குடிமக்களுக்கான செயலி (Smart Citizen App)

மாநகராட்சி மற்றும் திறன்மிகு நகரத் திட்டத்தின் செயல்பாடுகளை அறிந்து கொள்ளவும், கருத்துக்களை தெரிவிக்கும் பொருட்டும் அறிமுகப்படுத்தப்பட்ட இச்செயலி பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இச்செயலியின் மூலம் நாள்தோறும் சுமார் 150 எண்ணிக்கையிலான புகார்கள் பெறப்பட்டு உடனுக்குடன் பொதுமக்களின் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

### ❖ நீர்நிலைகள் புனரமைப்பு மற்றும் புதுப்பித்தல் (Water Bodies Rejuvenation & Restoration) மற்றும் உந்து சக்தியில்லா வாகனப் போக்குவரத்து (Lake and NMT)

மாநகராட்சிக்குச் சொந்தமான 8 குளங்களைப் புனரமைத்துப் புதுப்பிக்கும் பணியினை துவங்குவதற்கான திட்டமிடல் பணிகளுடன் குளங்களின் கரைகளைப் பலப்படுத்துதல், குளக்கரைகளை அழகு படுத்துதல், மிதிவண்டிப் பாதை அமைத்தல், நடைப்பயிற்சி சாலை அமைத்தல், பார்வையாளர் மாடம், சோலார் / எல்.இ.டி விளக்குகள்

அமைத்தல், படகு இல்லம் அமைத்தல், இயற்கைப் பூங்கா அமைத்தல் போன்ற பணிகளுக்கு கடந்த 18.09.2017 அன்று பணியுத்தரவு வழங்கப்பட்டு தி/ள். ஓயாஸிஸ், புது டெல்லி என்ற கலந்தாலோசக நிறுவனத்தால் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கலந்தாலோசகர் விரிவான திட்ட அறிக்கை மற்றும் வடிவமைப்புக்குபின் முதல் மற்றும் இடைநிலை அறிக்கைகள் சமர்ப்பித்துள்ளனர். மேலும் துரிதமாக செயல்படுத்தக் கூடிய மூன்று திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகள் சமர்ப்பித்துள்ளனர். இந்த திட்டங்கள் குறித்து சம்பந்தப்பட்ட இதர அரசு துறைகளை கலந்தாலோசித்த பிறகு மொத்தம் ரூ.89.00 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்ற தமிழக அரசின் உயர்மட்ட அதிகாரக் குழுவின் ஒப்புதல் 02.03.2018ல் பெறப்பட்டுள்ளது. இதற்கான தொழில் நுட்ப அனுமதி பெறும் பொருட்டு உரிய கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பப்பட்டு திறனாய்வு செய்யப்பட்டு வருகிறது. தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்ட பிறகு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படும்.

### ❖ மிதிவண்டிப் பகிர்வு (Cycle Sharing)

சுற்றுச் சூழல் மாசுபடா வண்ணமும், மோட்டார் இல்லா போக்குவரத்தினை ஊக்குவிக்கும் வகையிலும் உத்தேசிக்கப்பட்ட இத்திட்டம் **மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர்** அவர்களால் 03.03.2018ல் துவங்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இதற்கென ஆர்.எஸ். புரம் பகுதியில் முதற்கட்டமாக 2000 மிதிவண்டிகள் தி/ள். ஓஃபோ, சீன நிறுவனத்தினால் வழங்கப்பட்டு பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வரவேற்பை பெற்று வருகிறது. இப்பயன்பாடானது ஜி.பி.ஆர்.எஸ். தொழில் நுட்பத்தின் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு தி/ள். ஓஃபோ, சீன நிறுவனம் ரூ. 38.00 கோடி முதலீடு செய்து கோவை மாநகரம் முழுமையாக இத்திட்டத்தினை செயல்படுத்த திட்டமிட்டுள்ளது.

### ❖ திறன்மிகு பள்ளி (Smart School)

பகுதி சார்ந்த வளர்ச்சிப் பகுதியில் அமைந்துள்ள 22 மாநகராட்சிப் பள்ளிகளை திறன்மிகு பள்ளிகளாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக கீழ்கண்ட 5 பள்ளிகளுக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு இதற்கான நிர்வாக மற்றும் தொழில் நுட்ப ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | பள்ளி பெயர் மற்றும் அமைவிடம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 23 | சர்.சி.வி. ராமன் சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி ஆரம்பப்பள்ளி | 475.00 |
| 2 | 23 | கிழக்கு ஆரோக்கியசாமி சாலையில் அமைந்துள்ள பி.வி.பி ஆரம்பப்பள்ளி | 474.00 |
| 3 | 24 | மேற்கு சம்பந்தம் சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி | 591.00 |
| 4 | 24 | மேற்கு ஆரோக்கிய சாமி சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி இருபாலர் மேல்நிலைப்பள்ளி | 618.00 |
| 5 | 24 | சுப்பிரமணியம்சாலையில் அமைந்துள்ள மாநகராட்சி காதுகேளாதோர் பள்ளி | 593.00 |

மேற்கண்ட பணிகளுக்கு 16.03.2018 ல் பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஆய்வில் உள்ளன. இதர 17 பள்ளிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையரின் நிர்வாக ஒப்புதலுக்காக அடுத்து வரும் திறன்மிகு நகர நிர்வாக சபை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

### ❖ கட்டளை மற்றும் கட்டுப்பாடு மையம் (Command and Control Centre)

மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையக்கட்டிடம் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான ஒப்புதல் அடுத்து வரும் திறன்மிகு நகர நிர்வாக சபை கூட்டத்தில் பெறப்படவுள்ளது. மேற்படி பணிகள் தொடர்பான உபகரணங்கள் அமைக்கவும் கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள் வாங்கவும் (TUFIDCO) டுபிட்கோ நிறுவனத்தின் மூலம் ஒப்பந்தப்புள்ளிக்கான நாள் 04.04.2018 என நிர்ணயம் செய்து அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

## ❖ பசுமை மேம்பாடு (Green Space Development)

கோவை திறன் மிகு நகர் பகுதி வளர்ச்சி திட்டத்தில் கீழ்க்கண்ட நான்கு இடங்களில் நவீன பசுமை பூங்காக்கள் அமைக்க பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடந்து வருகிறது.

| வ. எண் | வார்டு எண் | தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 74 | சிவராம் நகர் (தெற்கு) | 99.00 |
| 2 | 74 | ருக்மணி நகர் | 99.00 |
| 3 | 79 | ஏ.கே.எஸ் நகர் | 94.00 |
| 4 | 71 | சிவராம் நகர் (மேற்கு ) | 94.00 |

இந்த பூங்காக்களில் சர்வதேச தரத்தில் நடைப்பயிற்சிப் பாதை, உடற்பயிற்சிக் கூடங்கள், யோகா மையம், செயற்கை நீரூற்றுகள் மற்றும் குழந்தைகளுக்கான விளையாட்டு அமைப்புகள் ஏற்படுத்தப்படவுள்ளது.

## ❖ சாலை அமர்வு இருக்கைகள் (Supply and Fixing of Smart Street Benches)

திறன்மிகு நகரத் திட்டத்தின் கீழ் மாநகரில் பொதுமக்கள் அதிகம் கூடும் **30** இடங்களில் சூரிய சக்தியின் மூலம் பொதுமக்கள் தங்களுடைய பல்வேறு மின்சாதனங்களை மின்னேற்றம் செய்து கொள்ளும் வசதிகளுடன் கூடிய சாலை அமர்வு நாற்காலிகள் தனியார் பங்களிப்புடன் அமைப்பதற்கான மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோர நடவடிக்கையில் உள்ளது. பரீட்சார்த்த முறையில் மாதிரி சாலை அமர்வு நாற்காலி மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் அமைக்கப்பட்டு தற்போது பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது.



### ❖ மாதிரி சாலை (Model Road)

ஆர்.எஸ்.புரம் பகுதியில் திவான்பகதூர் சாலையினை மாதிரி சாலையாக அமைக்கும் பொருட்டு ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அரசின் உயர்மட்ட அதிகார குழு ஒப்புதல் 02.03.2018ல் பெறப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் நடைபாதை மற்றும் இயந்திரமல்லாத வாகனப் போக்குவரத்து ஆகியவற்றிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் சாலைகள் வடிவமைக்கப்பட உள்ளன. சாலைகளில் சூரிய சக்தி மின்விளக்குகள், பொதுமக்கள் இருக்கைகள், பசுமைப் பகுதிகள், மேம்படுத்தப்பட்ட வாகன நிறுத்தங்கள் ஆகியவை அமைக்கப்படவுள்ளன. இதற்கான தொழில் நுட்ப அனுமதி பெறும் பொருட்டு உரிய கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பப்பட்டு திறனாய்வு செய்யப்பட்டு வருகிறது. தொழில் நுட்ப அனுமதிக்குப்பின் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும்.

திருவேங்கடசாமி சாலையினை மாதிரி சாலையாக மாற்ற திட்ட அறிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த திட்ட அறிக்கை அடுத்து வரும் திறன்மிகு நகர நிர்வாக சபை கூட்டத்தில் வைத்து ஒப்புதல் பெறப்படும். அதன் பின்னர் இத்திட்ட அறிக்கை அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும்.

### ❖ வ.உ.சி. உயிரியல் பூங்கா

வ.உ.சி உயிரியல் பூங்கா புதுப்பித்தல் சம்பந்தமான பணிக்கான விரிவான திட்ட அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசு அனுமதிக்குப்பின் பணிகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 2. அம்ருட் திட்டம்

### ❖ பூங்காக்கள் மேம்பாடு

அம்ருட் திட்டத்தின் கீழ் 2015–16ம் நிதியாண்டில் இம்மாநகராட்சியில் உள்ள 6 பூங்காக்களை ரூ.423.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்த தேர்வு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கடந்த 11.05.2017–ல் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளது.

மேலும், 2016–17ம் நிதியாண்டில் இம்மாநகராட்சியில் உள்ள 7 பூங்காக்களை ரூ.515.50 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தத் தேர்வு செய்யப்பட்டு கடந்த 28.07.2017–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளது. இரு பூங்காக்கள் பணி முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளன. 5 பூங்காக்களின் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

### ❖ இணைக்கப்பட்ட பகுதிகளுக்கான பாதாளச் சாக்கடைத் திட்டம்

இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் முதற்கட்டமாக குறிச்சி மற்றும் குனியமுத்தூர் பகுதியில் உள்ள வார்டு 87 முதல் 100 வரை அம்ருத் திட்டத்தில் ஏசியன் வங்கி உதவியுடன் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை மதிப்பீடு ரூ.589.54 கோடிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தயாரிக்கப்பட்டு 03.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேலும் இப்பணியினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ள நடவடிக்கையில் உள்ளது.

இரண்டாம் கட்டமாக மீதமுள்ள 9 இணைக்கப்பட்ட பகுதிகளுக்கான பாதாள சாக்கடை திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

### ❖ இணைக்கப்பட்ட 8 பகுதிகளுக்கான குடிநீர் விநியோகத் திட்டம்

இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட குறிச்சி மற்றும் குனியமுத்தூர் ஆகிய பகுதிகள் ஒரு சிப்பமாகவும், துடியலூர், வெள்ளக்கிணறு, விளாங்குறிச்சி, சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி மற்றும் காளப்பட்டி ஆகிய பகுதிகள் மற்றொரு சிப்பமாகவும் பிரிக்கப்பட்டு குடிநீர் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள மத்திய அரசு பங்குத்தொகை ரூ.130.49 கோடி, மாநில அரசு பங்குத்தொகை ரூ. 79.08 கோடி மற்றும் மாநகராட்சி பங்குத்தொகை ரூ. 204.93 கோடி ஆக மொத்தம் ரூ.414.50 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ள விரிவானத் திட்ட அறிக்கைக்கான அரசின் ஒப்புதல் பெறப்பட்டு 6 இணைக்கப்பட்ட பகுதிகளுக்கு M/S. RPP Infra Projects Ltd, ஈரோடு மற்றும் குறிச்சி, குனியமுத்தூர் பகுதிகளுக்கு M/S. NCC Ltd., Hyderabad நிறுவனத்திற்கும் 10.10.2017 தேதியில் பணி உத்தரவு வழங்கப்பட்டு குனியமுத்தூர் மற்றும் குறிச்சி பகுதிகளுக்கான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுமான பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழா **மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர்** அவர்களால் 08.02.2018 மற்றும் 21.02.2018ல் நடத்தப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தில் மொத்தம் 18 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டவும், 312.70 கி.மீ நீளத்திற்கு பிரதான குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகள் வரும் 2020ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்பட்டு பொது மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகிக்கப்படும்.

மேலும் துடியலூர், வெள்ளக்கிணறு, விளாங்குறிச்சி, சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி மற்றும் காளப்பட்டி ஆகிய பகுதிகளுக்கு 25 எண்ணிக்கையிலான நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுமான பணிகள் மற்றும் 742.37 கி.மீ நீளத்திற்கு பிரதான குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள 8 இணைக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் மேம்பாட்டு பணிகள் 2020 ஆம் ஆண்டுக்குள் முடிக்கப்பட்டு பொது மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகிக்கப்படும்.

## 3. பொறியியல் பிரிவு

### ❖ வெள்ளலூர் பகுதியில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம்

கோயம்புத்தூர் மாநகராட்சி வெள்ளலூர் பகுதியில் 61.62 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.236.17 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க தி/ள். மகேந்திரா கன்சல்ட்டிங் இன்ஜினியர்ஸ் நிறுவனம், சென்னை மூலம் விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்கப்பட்டு 05.07.2017 அன்று தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNUIFSL) நிறுவனத்தில் விரிவான திட்ட அறிக்கை தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. ஆய்வுக் கூட்டத்தில் உள்ளூர் அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடம் கருத்து கேட்பு கூட்டம் மாநகராட்சி ஆணையாளர் மற்றும் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் நடத்தி, அக்கருத்துக்களை பரிசீலித்து திட்ட அறிக்கை தயாரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

இதன் அடிப்படையில் 23.08.2017 அன்று பிற அரசு துறை அலுவலர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு ஆர்வலர்களின் கருத்து கேட்பு கூட்டம் ஆணையாளர் தலைமையிலும், 23.11.2017 அன்று மாவட்ட ஆட்சியர் மற்றும் ஆணையாளர்

தலைமையிலும் நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் **15.12.2017** தேதிய ஆய்வு கூட்டத்தில் இப்பணியினை திறன்மிகு நகரம் திட்டத்தில் (Smart City) பகுதி சார்ந்த அபிவிருத்தி (Area Based Development) இடத்திற்கு வெளியில் அமைவதால் Smart City தலைமை அலுவலகம், டெல்லியில் ஒப்புதல் பெற்ற பின் பணியினை திறன்மிகு நகரம் திட்டத்தில் (Smart City) மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

முதன்மை செயலாளர், சென்னை அவர்களால் **20.02.2018** அன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில், மேற்படி பணியினை கோயம்புத்தூர் மாநகராட்சி திறன்மிகு நகரம் திட்டத்தில் (Smart City) உள்ள நிதி நிலை, பகுதி சார்ந்த அபிவிருத்தி (Area Based Development) பகுதிகளின் போக்குவரத்து நெரிசல், பகுதி வளர்ச்சி, வெள்ளப்பெருக்கு மற்றும் பொது மக்கள் நடமாடுவது வெளியில் தெரியும் விதமான சுற்றுப்புறச் சுவர் ஆகியவற்றை உள்ளடக்கி விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு இப்பணியினை திறன்மிகு நகரம் திட்டத்தில் (Smart City) செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டது. இதனடிப்படையில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.

### ❖ பலஅடுக்கு வாகனங்கள் நிறுத்துமிடம்

இம்மாநகராட்சிக்குட்பட்ட காந்திபுரம் கிராஸ்கட் சாலை ஆர்.எஸ்.புரம், திவான் பகதூர் சாலை மற்றும் டவுன்ஹால் பகுதிகளில் இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடங்கள் போதுமானதாக இல்லாததால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, மேற்குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான காலி இடங்களில் வணிக வளாகங்களுடன் கூடிய தானியங்கி பலஅடுக்குமாடி இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடங்கள் அமைக்கும் பணியினை தனியார் மற்றும்

பொதுமக்கள் பங்களிப்புடன் (PPP Mode) மேற்கொள்ள கடந்த **09.11.2017–ல்** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. தமிழ்நாடு நகர்புர உட்கட்டமைப்பு மற்றும் நிதிச் சேவை கழகத்தால் (TNUIFSL) நியமிக்கப்பட்ட கலந்தாலோசக நிறுவனம் தி/ள். ஆக்ஸினோ கேபிடல் சர்வீஸஸ், நாக்பூர் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட இரு நிறுவனங்களுமே தொழில்நுட்ப தகுதி பெறவில்லை என தெரிவித்துள்ளது. அதைத்தொடர்ந்து புதிய ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### ❖ புதியதாக அனைத்து வசதிகளுடன் கூடிய லாரி நிறுத்துமிடம் அமைத்தல்

கோயம்புத்தூர் மாநகராட்சி, வெள்ளலூர் பகுதியில் கனரக சரக்கு லாரிகள் நிறுத்துமிடம் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு (TNUIFSL) தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்திற்கு நிதி ஆதாரம் வேண்டி அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

### ❖ புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளிகளை மேம்படுத்துதல்

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளிக்கட்டிடங்களில் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் கூடுதல் கட்டிடங்கள் **2017–18** ம் நிதியாண்டில் ரூ.**2.60** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

### ❖ இணைக்கப்பட்ட பகுதிகளில் (கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம்) குடிநீர் விநியோக மேம்பாடு

இத்திட்டத்தின்கீழ் **12** எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் குடிநீர் பிரதான மற்றும் பகிர்மான குழாய் மொத்த நீளமான **320.85** கி.மீ நீளத்திற்கு குழாய்கள் பெறப்பட்டு,**135.37**கி.மீ

நீளத்திற்கு பதிக்கப்பட்டு மீதமுள்ள 185.48 கி.மீ குழாய் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. தற்பொழுது 54% பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் இப்பணிகள் 2018–19ம் நிதியாண்டிற்குள் முடிக்கப்பட்டு கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம் பகுதி பொது மக்களுக்கு குடிநீர் விநியோக காலஇடைவெளி குறைத்து சீரான குடிநீர் விநியோகிக்கப்படும்.

### ❖ கவுண்டம்பாளையம் – வடவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டம்

கவுண்டம்பாளையம் வடவள்ளி மற்றும் வீரகேரளம் பகுதிகளில் குடிநீர் மேம்பாட்டு பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடைபெற்று 2018–19ம் நிதியாண்டுக்குள் அனைத்துப் பணிகளும் முடிவுற்று பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ள நிலையில் கூடுதல் குடிநீர் பெறுவதற்காக கவுண்டம்பாளையம் வடவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் அதிக திறன் மின் மோட்டார்கள் மாற்றியமைத்தல், சேதமடைந்துள்ள குழாய்களை மாற்றி இரும்பு குழாய் அமைத்தல் மற்றும் சுத்திகரிப்பு நிலையத்தில் கூடுதல் அபிவிருத்தி செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள ரூ.32.95 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்கப்பட்டு, நிதி ஆதாரம் வேண்டி தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை (TNUIFSL) நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. உரிய ஒப்புதல் பெறப்பட்டு இந்நிதியாண்டில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

### ❖ உக்கடம் பெரியகுளம் மேம்பாடு

கோயம்புத்தூர் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் குளங்களை புனரமைத்து மேம்பாடு செய்து மோட்டார் பயன்பாடு அல்லாத பாதை அமைத்தல் திட்டத்தின் கீழ் உக்கடம் பெரியகுளம் மேம்பாட்டு பணிகளுக்கு ரூ.39.74 கோடிக்கு அரசின் நிர்வாக அனுமதி கடந்த 02.03.2018ல் பெறப்பட்டுள்ளது.

விரைவில் இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் துவக்கப்படும். இத்திட்டத்தில் நடைபாதைகள், மோட்டார் பயன்பாடு இல்லாத வாகனப் போக்குவரத்து, பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த பூங்காக்கள், யோகா மையம், உடற்பயிற்சி கூடம், துரித உணவகங்கள், நவீன கழிப்பிட வசதி ஆகியவை அமைக்கப்பட உள்ளது.

### ❖ வாலாங்குளம் மேம்பாடு

கோயம்புத்தூர் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் குளங்களை புனரமைத்து மேம்பாடு செய்து மோட்டார் பயன்பாடு அல்லாத பாதை அமைத்தல் திட்டத்தின் கீழ் வாலாங்குளம் நடைபாதை (வடக்கு) பணிகளுக்கு ரூ.24.31 கோடிக்கும் வாலாங்குளம் மேம்பாலத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ரூ.23.83 கோடிக்கும் அரசின் நிர்வாக அனுமதி கடந்த 02.03.2018ல் பெறப்பட்டுள்ளது.

விரைவில் இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் துவக்கப்படும். இத்திட்டத்தில் நடைபாதைகள், மோட்டார் பயன்பாடு இல்லாத வாகனப் போக்குவரத்து, பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த பூங்காக்கள், யோகா மையம், உடற்பயிற்சி கூடம், துரித உணவகங்கள், நவீன கழிப்பிட வசதி ஆகியவை அமைக்கப்பட உள்ளது.

### ❖ சங்கனூர் பள்ளம் சீரமைப்பு

கோயம்புத்தூர் மாநகரில் அமைந்துள்ள இயற்கை வடிகாலான சங்கனூர் பள்ளத்தின் கரையோரங்களை பலப்படுத்தி சீரமைத்து கரைகளின் இருபுறமும் நடைபாதை அமைக்க உத்தேசிக்கப்பட்டு மழைக்காலங்களில் வெள்ள அபாயம் ஏற்படாமல் தடுக்கவும், பள்ளத்தின் இருபுறமும் பாதை அமைப்பதன் மூலம் பொது மக்களின் போக்குவரத்து நெரிசல் பிரச்சினைக்கு தீர்வு காணவும் முதற்கட்டமாக (Phase-I) திருத்திய விரிவானத் திட்ட அறிக்கைக்கான திட்ட மதிப்பீடு ரூ.190.00 கோடிக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திருத்திய விரிவான திட்ட அறிக்கை முன்மொழிவுகள், தமிழ்நாடு நகர்ப்புர

உட்கட்டமைப்பு நிதி வளர்ச்சிக் கழகத்தின் (TNUIFSL) ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் தி/ள். சன்கான் இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட், புனே நிறுவனத்தால் தற்சமயம் இப்பணிக்காக கள ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

### ❖ எல். இ. டி. தெருவிளக்குகள்

கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 40 வார்டு பகுதிகளில் மின்திறன் சேமிப்பின் முதற்கட்டமாக (ESCO phase –I) PPP முறையில் ஒளி மின் உமிழ் (LED) தெருவிளக்குகள் மற்றும் மின்சேமிப்பு சாதனங்கள் பொருத்தி தனியார் நிறுவனம் மூலம் இயக்கி பராமரிக்கப்பட்டு வருகிறது. இணைக்கப்பட்ட பகுதிகளில் மொத்தம் உள்ள 25296 தெருவிளக்குகளில் 18076 எண்ணிக்கையிலான 40W குழல் (Tube light) விளக்குகள் அனைத்தும் 15W மற்றும் 20W LED தெருவிளக்குகளாக மாற்றப்பட்டுள்ளன. மேலும் 2073 தெரு விளக்கு மின் இணைப்புகளில் மின் சேமிப்பு சாதனங்கள் பொருத்தி மின் சேமிப்பு ஏற்படுத்தப்பட்டு தானியங்கி On-Off சுவிட்சுகளும் பொருத்தி கணினி மயமாக்கப்பட்டு Central Control Monitoring Centre (CCMC) மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் Central Control Monitoring Centre (CCMC) கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் கடந்த 2017–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் 2018 ஆண்டு ஜனவரி மாதம் வரையான 6 மாத காலத்திற்கு ரூ.1.13 கோடி மின்சேமிப்பு ஏற்பட்டுள்ளது என இப்பணிக்கென நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ள தி/ள் TUV SUD South Asia (India) Pvt Ltd, நிறுவனத்தால் சான்று அளிக்கப்பட்டுள்ளது. மேலும் நடப்பு ஆண்டு மின் தேவையில் 43.56% மின் சேமிப்பு ஏற்பட்டுள்ளது எனவும் சான்று அளிக்கப்பட்டுள்ளது.

### ❖ ஹாக்கி விளையாட்டு தளம்

